Registered as a Newspaper in Ceylon

# ஈழநாடு

EELA NADU

விலை 30 National Tamil Daily தேசிய தினசரி தபால் பெட்டி 49

மலர் 6 குரோதி மார்கழி 28 ஆம் நாள் ரம்ழான் பிறை 7 (11-1-65) திங்கட்கிழமை இதழ் 333

நங்கையர் விரும்பும அழகிய தங்கப்பவுண் நகைகளை தயாரித்து அளிப்பவர்கள்

விஜயலெட்சுமி ஆபரண மாளிகை

ஓடர் நகைகள் உடனுக்குடன் செய்து தருவோம்.

ஆஸ்பத்திரி வீதி, வல்வெட்டித்துறை.

# சகல தொகுதிகளிலும் கட்சிகள் போட்டி

## இன்று அபேட்சா பத்திரங்கள் தாக்கல்

### தமிழ்ப்பகுதிகளில் 15 இடங்களில் தமிழரசு - காங்கிரஸ் மோதல்

யாழ்ப்பாணம், திங்கள்

சுதந்திர இலங்கையின் ஆறாவது பார்லிமெண்டுக்கான பொதுத்தேர்தலில் போட்டியிடவிருக்கும் அபேட்சகர்கள் இன்று நண்பகல் தங்களது நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்வார்கள். எதிர்வரும் தேர்தலில் போட்டியிடப்போவதாகப் பலர் ஏற்கனவே அறிவித்திருந்த பொழுதிலும் உண்மையில் யார் யார் எந்தெந்தத் தொகுதியில் போட்டியிடுவார்கள் என்பது இன்று நிச்சயமாகத் தெரிந்துவிடும்.

இலங்கையின் தமிழ்ப்பகுதிகளான வடக்கு, கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தமட்டில் தமிழரசுக் கட்சிக்கும் தமிழ்க் காங்கிரஸ் கட்சிக்குமிடையே தான் பலத்த போட்டியிருக்கும். ஆனால் எந்தத் தொகுதியிலும் இந்த இரண்டு கட்சிகளும் நேரடிப் போட்டியில் இறங்கவில்லை. தேர்தல் நெருங்கும் தறுவாயில் இரு கட்சிகளும் பலமான மேடைகளில் ஈடுபட்டிருந்தாலும் எதிர்வரும் பொதுத்தேர்தலில் அநேகமாக சகல தொகுதிகளிலும் மூன்றுக்கும் அதிகமான அபேட்சகர்கள் போட்டியிடுவதால் இவ்விரு கட்சிகளில் எந்தக் கட்சியும் அதிகமான பெரும்தொகை வாக்குகளினால் வெற்றிபெறுவது சிரமமென்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

#### தமிழரசு அபேட்சகர்கள்

எதிர்வரும் பொதுத்தேர்தலில் தமிழரசு கட்சி வடக்கு, கிழக்கு இரு மாகாணங்களிலும் மொத்தம் பத்தொன்பது தொகுதிகளில் போட்டியிடும். இது தவிர நிந்தவூர் தொகுதியில் இக்கட்சியின் சார்பில் யார் போட்டியிடுவார் என்பது இன்னும் நிச்சயமாக்கவில்லை, இந்தத் தொகுதியில் தமிழரசுக் கட்சி போட்டியிடுமா அல்லது எவரையும் ஆதரிக்குமா என்பது இன்று தெரிந்துவிடும். தமிழரசுக்கட்சி போட்டியிடும் தொகுதிகளும் அபேட்சகர்களின் விபரங்களும் வருமாறு:"

காங்கேசன்துறை-எஸ்- ஜே. வி. செல்வநாயகம், சாவகச்சேரி-வி என் நவரத்தினம், வட்டுக்கோட்டை-ஏ அமிர்தலிங்கம் பட்டிருப்பு-எஸ். எம். இராசமாணிக்கம், நல்லூர்- டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன், கோப்பாய்- எஸ். கதிரவேற்பிள்ளை, உடுவில்- வி. தர்மலிங்கம், பருத்தித்துறை - கே. துரைரத்தினம், உடுப்பிட்டி- கே. ஜெயக்கொடி, யாழ்ப்பாணம்- சி. எக்ஸ் மார்ட்டின், ஊர்காவற்றுறை - வி நவரத்தினம், கிளிநொச்சி - கா. பொ இரத்தினம், வவுனியா- ஜே. பி. வின்ஸன்ட், மன்னார்- வி. ஏ அழகக்கோன், திருக்கோணமலை - என், எம் மாணிக்கவாசகர், மூதூர்- எம், ஈ எம். முகம்மதலி, மட்டக்களப்பு - செ. இராசதுரை, கல்குடா - பி மாணிக்கவாசகர், கல்முனை -- என் சற்குரு மௌலானா, பொத்துவில் - எம் எஸ் காதர்

#### தமிழ் காங்கிரஸ் அபேட்சகர்கள்

தமிழ்க் காங்கிரஸ் வடக்கு கிழக்கு மாகாணங்களில், மொத்தம் பதினைந்து தொகுதிகளில் போட்டியிடுகின்றது: கிழக்கு மாகாணத்தில் பட்டிருப்புத் தொகுதியில் இக்கட்சி தனது அபேட்சகரை நிறுத்தவில்லை ஆனால் ஆதரவு அளித்திருக்கின்றது தமிழ்க் காங்கிரஸ் கட்சி போட்டியிடும் தொகுதிகளும் அபேட்சகர்களின் விபரங்களும் வருமாறு:-

ஊர்காவற்றுறை- என ரி சிவஞானம், யாழ்ப்பாணம்- ஜி ஜி. பொன்னம்பலம், நல்லூர்- சி. அரு

(6-ம் பக்கம் பார்க்க)

## வெற்றி தோல்வி இன்றி முடிவு

பம்பாய், ஜன. 10

இலங்கை கிரிக்கெட் கோஷ்டிகளும், பம்பாய் கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையே இங்கு நடைபெற்ற 3 நாள் விளையாட்டுப் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது ஸ்கோர் விபரம் வருமாறு:

**பம்பாய் கோஷ்டி**

1-ம் இன்னிங்ஸ் 4 விக்கெட்டுக்கு 270 ரன்கள்.

**இலங்கை**

1-ம் இன்னிங்ஸ் 169 ரன்கள். 2-ம் இன்னிங்ஸ் 256 ரன்கள்.

## சூறாவளியினால் 48,000 வீடுகள் சேதம்

### 40,000 வீடுகள் திருத்திக் கொடுக்கப்படும்

கொழும்பு, ஞாயிறு

தனிப்பட்டவர்களின் 48,000 வீடுகள் புயலினால் பாதிக்கப்பட்டுள்ளது என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த வீடுகள் திருத்துவதற்கு ஒரு கோடி செலவாகும். 40,000 தனிப்பட்டவர்கள் வீடுகளை திருத்திக் கட்டுவதற்காக அரசாங்கம் உதவியளிக்கும் மிகுதி 8,000 வீடுள்ளவர்களும் அவர்களின் வருமானம் 150 ரூபாவிற்கு அதிகமாக இருப்பதால் அவர்கள் உதவிபெறத் தகுதியற்றவர்களாகக் கணிக்கப்பட்டுள்ளனர்.

பதவியாப்பகுதியில் உள்ளவர்களின் அழிவு அரைக் கோடிக்கு மதிப்பிடப்பட்டிருக்கிறது. தனிப்பட்டவர்களின் பொருட்சேதமும் அழிவும் இரண்டு கோடிக்கு மதிப்பிடப்பட்டுள்ளது. ... இந்தப் புயலினால் ... தாகக் கூறப்படுகின்றது.

## "தெளிவாகச் சிந்தித்து மக்கள் வாக்களிக்க வேண்டும்"

### இலங்கை அரசியலில் "இரு சகாப்தங்கள்" பற்றி பிரதமர்

கொழும்பு, ஞாயிறு

இலங்கை சுதந்திரமடைந்த கடந்த 16 ஆண்டுகளில் 8 ஆண்டுக் காலம் முதலாளித்துவ ஆட்சி நடைபெற்றதென்றும், அடுத்த 8 ஆண்டுக் காலம் மக்களின் நலன்களுக்கான சோஷலிஸ ஆட்சி நடைபெற்றது என்றும் இந்த இரண்டு சகாப்தங்களில் செய்யப்பட்ட வேலைகளைக் கொண்டே வருகிற தேர்தலில் மக்கள் வாக்களிக்க வேண்டும் என்றும் பிரதமர் ஸ்ரீமதி பண்டாரநாயகா விடுத்துள்ள செய்தியில் கூறியிருக்கிறார். அவர் மேலும் கூறியிருப்பதாவது:

"1948-ம் ஆண்டு சுதந்திரம் கிடைத்தது முதல் 8 ஆண்டுகள், குறித்த ஒரு சில கோட்பாடுடையவர்களால் இந்த நாடு ஆளப்பட்டு வந்தது 1956 முதல் 64-ம் ஆண்டுவரை அடுத்த 8 ஆண்டுக் காலம் வேறு கோட்பாடு உள்ளவர்களால் ஆட்சி நடத்தப்பட்டு வருகிறது. முதலாவது முதலாளித்துவ சகாப்தம், இரண்டாவது சோஷலிஸ சகாப்தம் இந்த இரு சகாப்தங்களிலும் நாட்டில் ஏற்பட்ட மாற்றங்கள் அபிவிருத்திகள் பற்றி மக்கள் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும்.

(6-ம் பக்கம் பார்க்க)

ஈழநாடு சூறாவளி நிதி

## 'ஸெய்பி' தொழிலாளர் நிதி உதவி

சூறாவளியினால் பாதிக்கப்பட்டுத் துன்பமுறும் மக்களுக்கு உதவி செய்யுமுகமாக 'ஈழநாடு' ஆரம்பித்துள்ள சூறாவளி கஷ்டநிவாரண நிதிக்கு அன்பர்கள் தொடர்ந்து நிதிஉதவி அளித்து வருகின்றனர் யாழ்ப்பாணம் 'ஸெய்பி' போக்குவரத்துச் சேவை தொழிலாளர் இந்நிதிக்கு 71 ரூபாய் அளித்துள்ளனர். துன்பமுறும் மக்களுக்கு உதவியளிக்க விரும்புவோர்

**"புயல் கஷ்டநிவாரண நிதி"**

**"ஈழநாடு", த. பெ. எண் 49, யாழ்ப்பாணம்**

என்ற விலாசத்துக்கு அனுப்பிவைக்கவும். வசூல் விவரங்கள் அவ்வப்போது 'ஈழநாடு'பத்திரிகையில் வெளியிடப்படும்.

யாழ்ப்பாணம் செய்பி போக்குவரத்துச் சேவையாளரின் தொழிலாளர் சேர்த்துதவிய நிதிவிபரம்:

| | |
|---|---|
| க. முருகேசு | 15 |
| என். அப்துல்அலி | 7 |
| சி. சந்திரசேகரம் | 5 |
| கே. சரவணமுத்து | 5 |
| என். நவரத்தினம் | 5 |
| ஏ. மாணிக்கம் | 5 |
| கே. நடராசா | 3 |
| பி. கண்ணன் | 5 |
| பி எம். சமீம் | 3 |
| என் செல்வலிங்கம் | 5 |
| கே. என் தனபாலன் | 5 |
| வி. பஞ்சாட்சரம் | 5 |
| கே. செல்வப்பிரகாசம் | 3 |
| சி. கணபதி சித்திரமேனி, இளவாலை | 15 |
| வே. கிருஷ்ணன் சித்திரமேனி, இளவாலை | 10 |
| வ. ஆறுமுகம் சித்திரமேனி, இளவாலை | 5 |
| த பரமேஸ்வரி சித்திரமேனி, இளவாலை | 5 |
| சி. பொன்னு சித்திரமேனி, இளவாலை | 6 |
| த. செல்லம்மா ரேவதி வாசம் இளவாலை | 10 |
| க. தெய்வானைப்பிள்ளை சங்கரத்தை | 5 |
| பிரேமா, நித்தியா, ஜயசீலன் - நல்லூர் | 30 |

## பால் டின் நன்கொடை

இலங்கை தேசிய க்ஷய ரோகத் தடுப்பு சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளை 48 டின் (114 ரூத்தல்) கவ் அன் கேட் பால் டின்களை 'ஈழநாடு' நிவாரண உதவிக்காக வழங்கியிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

நீங்களெல்லாரும் சுயநலமின்றி, பிறமக்களை உண்மையில் நேசித்தால், யாருமே துன்பப்படக் காரணமில்லை. மனிதனின் சுயநலம்தான் எல்லாத் துன்பங்களுக்கும் அடிப்படை காரணமாகும்.

— சுவாமி ராமதாஸ்


# ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Box: 49, Jaffna. Telegrams: 'EELA NADU' Jaffna Phone: 389.

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு மார்கழி மீ 28உ (11-1-65)


## தாயிடம் தருக!

யாழ்ப்பாணத்திலே சூறாவளி கஷ்ட நிவாரணத்துக்காக ஓரிடத்தில் ஒரு குடும்பத்துக்கு இருபது ரூபாய் வரை அரசாங்கம் விநியோகித்ததாம். இது மிக அற்ப உதவியே. என்றாலும் கிடைத்தபணத்தை சிலர் குடித்துக் கொண்டாடி வீணாக்கியதாயும், அதனால் மேற்கொண்டு இவ்விதப் பணத்தை விநியோகிப்பதை நிறுத்திவைத்துள்ளதாயும் தெரிகிறது. ஒரு சிலர் இவ்விதம் செய்தது உண்மையாக இருக்கலாம். என்றாலும் இதற்காக அந்த அற்ப உதவிப் பண விநியோகத்தையும் நிறுத்திவைப்பது சரியாகாது பல திக்கற்ற எளிய குடும்பங்களுக்கு இப்பணம் உயிர்க் கஞ்சிவார்ப்பதாக இருக்கும்.

பிரிட்டனிலே அதிக குழந்தைகளுடைய குடும்பங்களுக்கு அரசாங்கம் வாராவாரம் உதவிப் பணம் அளிக்கும் மேலான சமூக சேவைத் திட்டமொன்றுண்டு. குழந்தைகள் அதிகமிருப்பின், குடும்பவருமானம் போதாமல், பல குழந்தைகள் தக்க பராமரிப்பு இன்றி தவிக்க நேரிடுமென்பதையும், குழந்தைகளே நாட்டின் எதிர்காலச் செல்வம் என்பதையும் உணர்ந்த பிரிட்டிஷ் அரசாங்கம் இந்த ஏற்பாட்டை தங்கள் நாட்டில் செய்துள்ளது. இதில் முக்கிய விஷயமென்னவெனில், அந்த உதவியை, குடும்பத்திலுள்ள தயிடம் கொடுக்க வேண்டுமென்று சட்டத்தில் ஒரு திட்டமான விதியைச் சேர்த்துள்ளதுதான். இதற்குத் தக்க காரணம் இருக்க வேண்டும்.

குழந்தைகளுக்கு உணவூட்டி உடை உடுத்தி சோர்வடையாமல் காதுகாத்து வளர்க்கும் பெரும் பொறுப்பு சாதாரணமாக குடும்பத்திலுள்ள தாய்க்குத்தான் அதிகமுண்டு. தந்தைமார்களிடம் அந்த உதவிப் பணத்தைக் கொடுத்தால், அதை ஊதாரித்தனமாக வீணாக்கி, குழந்தைகளுக்கு அப்பணம் உதவாமல் போகக் கூடுமென்ற காரணத்தாலேயே பொதுவாகத்தாயிடத்திலேயே குழந்தைகளின் உதவிப்பணத்தைக்கொடுக்கவேண்டுமென்று மிக முன்யோசனையுடனும் கவனயுடனும் பிரிட்டிஷ்பார்லிமெண்ட்சபை இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கவேண்டும்.

நம் இலங்கையிலே ஒருவருக்கு எவ்வளவு பெரியகுடும்பமிருப்பினும் வருமானம் போதாமல், நாட்டின் உண்மைச் செல்வங்களான குழந்தைகள் தக்க உணவு வசதியின்றி தவித்து உடல் நலிவுற்றாலும், அவர்களுக்கு பிரிட்டனிலுள்ளதைப் போல் அரசாங்க உதவி எதுவும் கிடைப்பதில்லை பொருளாதாரக் காரணங்களை இதற்குச் சமாதானமாகச் சொல்லக்கூடும் அது எப்படியாயினும், ஏதோ சூறாவளி போன்ற பெரும் சோதனைகள் ஏற்பட்ட சமயத்தில் இப்படி விசேஷமாகக் கொடுக்கப்படும் உதவிப்பணமும், கூட குடும்பத்துக்கும் குழந்தைகளுக்கும் பயன்படாமல், வீண் செலவுக்கு விரயமாவதாயின் அதற்கு இடமளிக்கப்படாது.

உதவிகள் கொடுப்பதுடன் அரசாங்கத்தின் பொறுப்பு முடிந்துவிடவில்லை. கொடுக்கும் பணம் அக்குடும்பத்துக்கும் சிறப்பாகக் குழந்தைகளுக்கும் பயன்படும்படியான வகையில் அதைக் கொடுக்கச் செய்யவேண்டும் குடும்பத்தலைவிடமே இவ்வித உதவிகளைக் கொடுக்க வேண்டுமென்பது இங்கு அரசாங்கத்தின் நிர்வாக வித்தியாசம். அதனால் குடும்பத் தாயிடம் சொற்ப உதவிகளையும் கொடுக்கமுடியாமலும், அப்பணம்வெறுவாக விரயமாவதாயும் இருப்பதாயின், குழந்தைகளின் மேலான நன்மையைக்கருதி, அந்த விதியைத் திருத்தி தாயிடமே கொடுக்கச் செய்ய வேண்டும் நிர்வாகமுறை பற்றிய இச்சிறு திருத்தத்தைச் செய்வதில் அதிகக் கஷ்டமிராதென்றே நம்புகிறோம்.

## 'தேசியபோராட்டம் ஆரம்பமாகிறது'

கொழும்பு, ஞாயிறு

"எங்கள் மக்களின் வருங்காலத்தை நிர்ணயிக்கும் பெரிய போராட்டத்தை நாளை நாம் ஆரம்பிக்கின்றோம். இந்த நாட்டில் கடந்த 2500 ஆண்டுகளாக பௌத்தமதம் பாதுகாக்கப்பட்டு வந்தது. நாளை தேர்தல் பத்திரங்கள் கொடுக்கப்பட்டபின்னர் எங்கள் தேசியப போராட்டம் ஆரம்பமாகின்றது" என்று ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் திரு டட்லி சேனநாயக்கா பத்திரிகைக்கு விடுத்த செய்தி ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

## வெளி நடப்பு

கொழும்பு, ஞாயிறு

கூட்டுறவு மொத்தவியாபாரத்தைச் சேர்ந்த இலங்கை வர்த்தக யூனியன் நேற்று தலைமைக் காரியாலயத்தில் வெளி நடப்புச் செய்தது.

பதவி உயர்வில் சில சீரற்ற முறையில் முகாமையாளர் நடந்துகொண்டதற்காகவே இந்த வெளி நடப்புச் செய்யப்பட்டது.

## பார்லிமெண்ட் காரியதரிசிகள்

கொழும்பு, ஞாயிறு

அரசாங்க சட்ட ஆலோசகர்களின் பாராளுமன்றக் காரியதரிசிகள் தங்கள் பதவிகளைக் கடந்தவாரம் ராஜினாமா செய்தனர்.

ராஜினமா செய்யாது தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றால் இவர்கள் சட்டப்படி தகுதியற்றவர்களாகக் காணப்படுவார்கள் என்று அரசாங்க சட்ட ஆலோசகர்கள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

ஆசிரியருக்குக் கடிதங்கள்

## "யாருக்கு நிவாரணம்?"

மன்னார், வவுனியா, பதவியா முதலிய இடங்களில் புயல் நிவாரண உதவியாக தனிப்பட்ட முதலாளிமார்கள், தனவான்கள் தங்கள் லொறிகளில் உணவுப் பண்டங்களையும், துணிமணிகளையும் ஏற்றிக் கொண்டுவந்து இலவசமாக விநியோகிக்கிறார்கள் அவற்றை நான் நேரில் நின்று பார்த்தேன். புயலால் பாதிக்கப்படாதவர்கள்தான் பெரும்பாலும் உணவுகளையும், துணிகளையும் அடிபட்டும் உதைபட்டும் பறித்து எடுத்துக்கொள்கிறார்கள். பாதிக்கப்படாத வேறு வேறு பகுதியில் உள்ளவர்கள்தான் பெரும்பாலும் இப்படியான செயலில் ஈடுபடுகிறார்கள். ஓர் அன்பர் ஓடோடி வந்து இலவச துணியும் உணவும் கேட்டார். அவருக்குக் கிடைத்தது அரை ரூத்தல் கிழங்கு (2 கிழங்கு) மாத்திரம் தான் அந்த அன்பர் தனது சோக வரலாற்றைக் கூறினார். தனக்கு எட்டுப் பிள்ளைகள் உண்டென்றும் தனது குடும்பத்தில் உழைப்பவர், தானே யென்றும் தனது வீடு இருக்க இடமே இல்லாமல் மன்னார்க் கடலில் 400 அடி தூரத்தில் அள்ளி வீசப்பட்டதென்றும், தனது வீட்டினுள் ஐந்தரை அடி நீர் புகுந்தபடியால் தனது சிறு பிள்ளைகளை நீர் இழுத்துச் சென்றதும், தானும் மனைவியும் நீருடன் போராடி பிள்ளைகளைமாத்திரம் காப்பாற்றி வீட்டைவிட்டு ஓர் திடலில் இருந்ததாகவும், உடமைகளெல்லாம் நீர் கொண்டுபோய் விட்டதாகவும் மிக்க கவலையுடன் இனைத்து இனைத்து நிலைமையைக் கூறினார். இப்படி பட்டவருக்குக் கிடைத்தது இரண்டு கிழங்குமாத்திரம் தான். உள்ளவர்கள் இலவச விநியோகத்தில் பங்குபற்றுவதால் புயலால் பாதிக்கப்பட்டவர்கள் நிவாரணம் பெறமுடியாதுபோய்விடுகிறது.

ஏ. கனகசபை.

ஓமந்தை.

## பெரிய பஸ் வேண்டும்

பருத்தித் துறையிலிருந்து யாழ்ப்பாணம்வரை அதிகாலையில் சேவைக்கு விடப்படும் முதலாவது பஸ் மிகச் சிறிதாக இருப்பதனால் வெளியூருக்குப் பிரயாணம் செய்வதற்கு வேறு பஸ்ஸையோ, புகையிரதத்தையோ பிடிப்பதற்கு யாழ்ப்பாணம் செல்பவர்கள் மிகவும் அசௌகரியத்துக்குள்ளாகி வருகின்றனர். 37 பேர் மட்டும் ஏறக்கூடிய சிறிய பஸ் ஒன்று தான் பெரும்பாலும் அதிகாலைச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வருகிறது. அதனால் இந்த பஸ்ஸில் ஏற இடம் கிடைக்காத வெளியூர் பிரயாணிகள் புகையிரதத்தையோ, வெளியூர் பஸ்ஸையோ தவறவிட்டு நிற்கவேண்டியிருக்கின்றது. கடந்த திங்கள் காலை கோப்பாய்ச் சந்தியில் நின்ற எட்டுப்பேரை ஏற்றியவுடன பஸ் கண்டக்டரே, ஏறும் வாசலிலுள்ள கம்பியைப் பிடித்துக்கொண்டு பஸ்ஸிற்கு வெளியில் தொங்கிக் கொண்டிருக்கவேண்டிய நிலை ஏற்பட்டது அதற்கு அப்பாலுள்ளவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை.

ஆகவே வெளியூர்ப் பிரயாணிகளின் வசதியை முன்னிட்டு பருத்தித்துறை—யாழ்ப்பாணம் வீதியில் அதிகாலைச் சேவைக்குப் பெரிய பஸ் ஒன்று விடப்படவேண்டும். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதுபற்றி உடன் நடவடிக்கை எடுப்பார்களா?

வி. சண்முகராஜா.

கோப்பாய்

# துயருற்ற தமிழர்களுக்கு சிங்கள மக்கள் உதவி

## வவுனியாவில் நிலைமை சீராகுகிறது

வவுனியா, ஞாயிறு

வவுனியா மாவட்டத்தில் சூறாவளியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மேலும் லட்சரூப பெறுமதியுள்ள பொருட்கள் இலவசமாக விநியோகம் செய்யப்பட்டுவருகிறது எந்தவித பாகுபாடுமின்றி சகல மக்களுக்கும் இங்கு பொருள்கள் விநியோகிக்கப்படுகின்றன பொது ஸ்தாபனங்களும், தனிப்பட்ட முதலாளிகளும், சமூக சேவை சங்கங்களும், விவசாய சமூகங்களும் வெளியூர்களிலிருந்து 40 தொடக்கம் 50க்கு மேற்பட்ட லொறிகள், வான்கள், மோட்டார் கார்கள் ஆகியவற்றின் மூலம் நேரடியாக கிராமங்களுக்கு விநியோகம் செய்துவருகிறார்கள்.

### தமிழ்—சிங்களம் ஒற்றுமை

கொழும்பு—குருநாகல் பகுதியிலிருந்து நேற்று முன்தினம் ஓர் வான்மூலம் வவுனியாவை வந்தடைந்த புத்தகுருமார்களையும், அவர்கள் கொண்டுவந்த புடவை மற்றும் உணவுப் பொருள்களையும் நேரில் கண்ட எமது நிருபர் அவர்களிடம் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறியதாவது:-

நாம் தமிழ் நாட்டுக்கு தமிழ்—சிங்கள பிரச்னையின்றி சேவை செய்வதைத்தான் அடிப்படையாகக் கொண்டுள்ளோம். பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் தொண்டுசெய்வதற்கு நாம் கடமைப்பட்டுள்ளோம், எமது மக்களின் மனதில் இன்று தமிழ்-சிங்கள பிரச்னை தலைவிரித்துத் தாண்டவம் ஆடுகின்றது. இப்படியான பிரச்னைகளை, நாம் செய்யவும் சேவை ... மக்கள் எமது அடிப்படையின் வைத்தால் எமது சகல பிரச்னைகளும் தீரும். சூறாவளியால் பாதிக்கப்பட்ட இப்பகுதி மக்களுக்கு உதவிகள் செய்ய முன்வரீர் என்று திரு சிவசிதம்பரம் விடுத்த வேண்டுகோளை நாம் பத்திரிகை மூலமாக அறிந்ததும் இப்பகுதி மக்களுக்கு சேவை செய்ய வேண்டுமென்ற எண்ணத்துடன இங்கு வந்துள்ளோம்"

### உதவிகள்

இலங்கையின் பல பாகங்களிலுமிருந்து பாண், அரிசி, கிழங்கு, பழங்கள், தேங்காய், சீனி, தேயிலை, பாய், தலையணை, போர்வை, புகையிலை; கருவாடு; பழுதுபடாமல் பாதுகாக்கப்பட்ட உணவுப் பார்சல்கள் ஆகியவைகள் அடங்கிய சாமான்கள் பல இப்பகுதிகளுக்கும் விநியோகித்துவரப்படுகின்றன.

## "புகழைவிட சேவையே பெரிது"

கொழும்பு. ஞாயிறு

இலங்கையில் பிரபல்யமான மூன்று சகோதரர்களில் இளையவரான சேர். பொன் அருணாசலம் நாற்பதொரு ஆண்டுகளுக்கு முன்னர் இறந்த சமயம், சாதி சமய வேறுபாடின்றி அவருக்கு இறுதி மரியாதை செலுத்த ஒன்றுகூடியிருந்தனர் இப்படியான சந்தர்ப்பத்தில் நாங்கள் அவரின் புகழை பற்றி சிந்தியாது அவரின் பெருமையான பெல்களையே சிந்திக்கவேண்டும் சேர் பொன்னம்பலம் அருணாசலம் தான் இலங்கை சுதந்திரம் பெறவேண்டும் என்ற எண்ணத்தை முதலில் மனதில் கொண்டவர்" இவ்வாறு நீதியரசர் சிறிஸ்கந்தராஜா ஐனபிரதிநிதிகள் சபையில் உள்ள சேர். பொன். அருணாசலத்தின் சிலைக்கு மணிமாலை சூட்டியபின்னர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

## ஐயாறன் எழுதுவது

புதிய தேர்தலுக்கான அபேட்சகர் விபரமெல்லாம் இன்று தெரிந்துவிடும். கட்சிசார்பாக போட்டியிடுபவர்களை விட சுயேச்சையாக, தனிப்பட்ட முறையில் போட்டியிடுபவர்களுக்கு அதிக சங்கடமுண்டு.

கட்சி அபேட்சகர் கட்டுப்பணமாக 250 கட்டினால் போதும். தனிப்பட்டவர்களோ ஆயிரம் ரூபாய் கட்டவேண்டும் கட்சியின் தேர்தல் அடையாளத்தைப் பற்றி கவலையில்லை. தனிப்பட்டவருக்கு இஷ்டமான தேர்தல் அடையாளம் கிடைப்பதும் கஷ்டம்.

ஒரு சுயேச்சை அபேட்சகர் "சூரியன்" வேண்டுமென்று விரும்பினாராம். ஆனால் சூரியனை, வி. பி. டி சில்வாவின் ஸ்ரீலங்கா சமதர்மக் கட்சியினர் வகித்துக்கொண்டுவிட்டதாயும் அதனால் சூரியனை வேறு யாரும் பெறமுடியாதென்றும் அதிகாரி மறுத்துவிட்டதாய்த் தெரிகிறது, பாவம்.

* * *

சூரியனுக்கு இப்போது இலங்கையில் அதிக கிராக்கி ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே தமிழ் நாட்டிலே தீமுக காரர்கள் உதய சூரியனையே தங்கள் தேர்தல் சின்னமாக வகித்துள்ளனர். தமிழ்நாட்டிலே தேர்தல் காலத்தில் சென்று பார்த்தால் பலபலகைகளிலும் சூரியன் உதித்திருப்பதையும், அவருக்கே வாக்களிக்கும்படி நம்மைக் கேட்பதையும் காணலாம்,

இங்கு சமீபத்தில் 'சன்' (சூரியன்) பத்திரிகை ஆரம்பமாகியது. இந்த இங்கச்சூரியனுக்கும், வி பி டியின் சூரியனுக்கும் ஏதாவது தொடர்புண்டா என்பது தெரியவில்லை. எப்படியும் தமிழகத்து தீமுக காரரின் சூரியனுக்கும் இலங்கையிலே வி பி டி சில்வாவின் கட்சி சூரியனுக்கும் ஸ்நானப் பிராப்தியும் இருக்க முடியாது.

* * *

இங்கு கம்யூனிஸ்ட் கட்சியினர் பலவருடங்களாக நட்சத்திரத்தையே தெரிவுசெய்திருக்கிறார்கள். நட்சத்திரத்தைவிட சூரியன் பெரிதென்றும் நினைத்து (!) அவர்களுக்குப்போட்டியாகவே சில்வா கட்சியினர் சூரியனைத் தெரிவுசெய்தார்களோ தெரியவில்லை. அப்படியாயினும், உலகனைத்துக்கும் பொதுவுடைமையான சூரியன் ஒரு கட்சிக்கு ஏகபோக உரிமையாகிவிட முடியாது.

சூரியனுக்கும் நட்சத்திரத்துக்கும் தேர்தல்காலத்தில் அதிக கிராக்கி இருக்கையில் அழகான சந்திரனை ஏன் சும்மாவிட்டிருக்கிறார்களென்று ஓர் அன்பர் கேட்கின்றார். என்ன காரணமோ தெரியவில்லை!

* * *

மையனைய கண்டத்தாய்
மாலும் மற்றை
வானவரும் அறியாத
வண்ணச் சுடர்க்
கையவனே கடியிலங்கைக்
கோனை யன்று
கால்விரலாற் கதிர்முடியுந்
தோளுஞ் செற்ற
மெய்யவனே யடியார்கள்
வேண்டிற் றீயும்
விண்ணவனே விண்ணப்பங்
கேட்டு நல்குஞ்
செய்யவனே திருச்சோற்றுத்
துறையுளானே
திகழொளியே யுன்
னபயம் நானே,
—அப்பர் சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ. நா. விலிருந்து இந்தோனேஷியா விலகுவதற்கு சீனா காரணமல்ல

## எமது முடிவு இறுதியானது

### அதிபர் சுகர்ணோ அறிவிப்பு

ஜாகர்த்தா, ஜன. 10

ஐக்கியநாடுகள் ஸ்தாபனத்திலிருந்து இந்தோனேஷியா விலகுவதற்கும் சீனாவுக்குமிடையே எந்தவித சம்பந்தமுமில்லையென்று இந்தோனேஷிய அதிபர் சுகர்ணோ அறிவித்துள்ளார்.

ஜப்பானிய நிருபர் ஒருவருக்கு அளித்த பேட்டியில் தான் அவர் மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்.

"ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்திலிருந்து இந்தோனேஷியா விலகிவிட்டது இது சம்பந்தமான அறிக்கை தயாரிக்கப்பட்டுவருகிறது. மலேசியாவுக்கு அங்கத்துவம் கொடுத்த ஒரே காரணத்துக்காகவே இந்தோனேஷியா ஐ. நா விலிருந்து விலகிக்கொள்கிறது. இந்தோனேஷியாவின் இந்த முடிவுக்கும் சீனாவுக்கும் எந்தவித தொடர்பும் இல்லை" என்றும் அவர் கூறினார்.

ஐ. நாவிலிருந்து நாம் விலகிக்கொள்வதால் ஆசிய-ஆபிரிக்க ஒற்றுமை சீர்குலைந்துவிடமாட்டாது. புதியவிதத்தில் ஆசிய—ஆபிரிக்க ஒற்றுமையை வளர்க்க இந்தோனேஷியா பாடுபடும்" என்றும் அதிபர் சுகர்ணோ தெரிவித்தார்.

## சீனாவே முழுக்காரணம் என்கிறார் மலேசிய அதிகாரி

கோலாலம்பூர், ஜன. 10

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்திலிருந்து இந்தோனேஷியா விலகிக் கொண்டதற்கு கம்யூனிஸ்ட் சீனா பின்னணியாக விருந்தது என்று மலேசிய வெளிவிவகார இலாகா அதிகாரியான திரு அசமட் கேர்டின் தெரிவித்தார்.

சீனாவுடன் கலந்து ஆலோசித்த பின்னர் தான் இந்தோனேஷியா இந்த முடிவுக்கு வந்திருக்கிறது என்பதை அவர் உறுதிப் படுத்திக் கூறினார்.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்திலிருந்து இந்தோனேஷியா விலகிக் கொண்டதால், ஜாகர்த்தாவுக்கும் பீகிங்குக்குமிடையே கூடிய தொடர்புகள் வலுப்பெறும் என்றும் இதன் விளைவு மலேசியாமீது பரவும் என்றும் அவர் கருத்து வெளியிட்டார்.

# அமெரிக்க உதவிகள் நிறுத்தப்படுமா?

வாஷிங்டன், ஜன. 10

இந்தோனேஷியாவுக்கான உதவிகளைக் குறித்து அமெரிக்கா புனராலோசனை செய்கிறதென்று அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஐக்கிய நாடுகள்ஸ்தாபனத்திலிருந்து இந்தோனேஷியா விலகப்போவதாக அதிபர் சுகர்ணோ அறிவித்திருந்ததைத் தொடர்ந்தே அமெரிக்கா ஆலோசனை செய்துவருவதாக அந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த நிதி வருடத்தில் இந்தோனேஷியாவுக்கு அமெரிக்கா ஒருகோடி டாலர்கள் உதவி பண்ணவிருக்கிறது.

கம்யூனிஸ்ட் சீனாவுக்கும் இந்தோனேஷியாவுக்கு மிடையே மிகுந்த நட்புறவு இருந்துவருகிறது. இதன் பலனாகவே இந்தோனேஷியா ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்திலிருந்து விலகிக்கொண்டது என்று அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

# இந்தோனேஷிய கொரில்லாக்கள் தொடர்ந்து கைது

## மலேசியா துரித நடவடிக்கை

கோலாலம்பூர், ஜன. 10

மலேசியப் பகுதியில் புதிதாக இறங்கிய சில இந்தோனேஷிய வீரர்கள் கைதுசெய்யப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சிங்கப்பூரிலிருந்து சிலமைல் தூரத்திலுள்ள ஒருபகுதியில் சிறிய படகுகளில் வந்திறங்கிய இந்தோனேஷிய வீரர்கள் குறித்து மலேசிய விவசாயி ஒருவர் அறிவித்ததைத் தொடர்ந்து அவர்களில் 14 பேர் கைதுசெய்யப்பட்டனர். மிகுதியானவர்களைத் தேடும் முயற்சி துரிதமாக மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. சில ஆயுதங்களும், வெடிமருந்துகளும் கைப்பற்றப்பட்டன.

படகு மூழ்கடிக்கப்பட்டது

மலாக்கா என்ற இடத்தில் சில இந்தோனேஷிய கொரில்லாக்கள் படகு ஒன்றில் வந்திறங்கிக்கொண்டிருந்தபொழுது மலேசியவீரர்கள் அப்படகைத் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர். இதனால் அப்படகு நீரில் மூழ்கியது. படகில் இருந்தவர்களில் சிலர் தப்பிவிட்டனர். எட்டுப்பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்தோனேஷிய கொரில்லாக்கள் மற்றுமொருதடவை தரையில் இறங்கியபொழுது அவர்கள் கைதுசெய்யப்பட்டனர். இம்மாதத்தில் இரண்டு தடவைகளில் இந்தோனேஷிய கொரில்லாக்கள் தரையிறங்கியுள்ளனர்.

### பஸ் விபத்தில் 8 பேர் பலி

சென்னை, ஜன. 10

கோயம்புத்தூருக்கு அருகே ஏற்பட்ட பஸ் விபத்தில் எட்டு பேர் மாண்டனர். பஸ் ஒன்று குன்றின் மீது சென்றுகொண்டிருக்கையில் பாதையை விட்டு விலகியதால் இவ்விபத்து ஏற்பட்டது.

### செக். பிரதமர் இந்தியவிஜயம்

புதுடில்லி, ஜன. 10

செகோஸ்லாவேக்கிய பிரதமர் இந்தியாவில் சுற்றுப்பிரயாணம் செய்யும்பொருட்டு அடுத்தவாரம் புதுடில்லி வந்து சேருவார்.

### இந்திய ஹாக்கி கோஷ்டி

புதுடில்லி, ஜன. 10

16 பேர் கொண்ட இந்திய ஹாக்கி கோஷ்டியொன்று ஐரோப்பாவுக்கு விஜயம் செய்யும்பொருட்டு புதுடில்லியிலிருந்து [illegible] படும்.

## எட்டு அடி சிறுத்தை

ஒம்மாகர், (வ. மே. இந்தியா) ஜன. 10

இந்தியாவின் வடமேற்குப் பகுதியிலுள்ள ஒமமாகர் என்ற இடத்திலிருந்து 100 மைல் மேற்கே எட்டு அடி நீளமான சிறுத்தையொன்று சுட்டுக் கொல்லப்பட்டது.

## மேலும் எண்ணெய் கண்டுபிடிப்பு

லாவோஸ், ஜன. 10

நைஜீரியாவில் மற்றுமொரு எண்ணெய்க் கிணறு கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. கிழக்கு நைஜீரியாவிலிருந்து 80 மைல் தென மேற்கே எண்ணெய் வளம் இருக்கிறது இது மூன்றாவது எண்ணெய் கிணறாகும்.

## "கவலையை நீக்கி முன்னேறவேண்டும்"

கல்லூர், திங்கள்

"அரசியல், இலக்கியம் எந்தத் துறையாயினும் கஷ்டங்கள் ஏற்பட்டமைக்கு நாம் நமது முன்னோர் காட்டிய வழிகளைப் பின்பற்றத் தவறியமையே காரணம். கஷ்டங்கள் ஏற்பட்டுவிட்டனவே என்று கவலைப்படாது நிதானமாகச் சிந்தித்து தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளல் தான் அறிவுடைமை" என்று கல்லூரில் நடைபெற்ற நகைச்சுவைவிழாவில் உரைநிகழ்த்திய டாக்டர் செ. சிவஞானசுந்தரம் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் இளம் டிகர் சங்கத்தின் ஆதரவில் கல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலை மண்டபத்தில் நகைச்சுவைவிழா நடைபெற்றது.

கலைவாணர் அரங்கில் நடைபெற்ற இவ்விழவுக்கு திரு. சி. சரவணபவன் தலைமை வகித்தார்.

டாக்டர் சிவஞானசுந்தரம் மேலும் குறிப்பிட்டதாவது:

இந்த நாட்டில் நமக்கு ஏற்பட்டுள்ள கஷ்டங்களைவிட்டு அழுவதா சிரிப்பதா என்று தெரியாமல் தத்தளிக்கிறோம். கவலைகளை மறக்கச் செய்ய நகைச்சுவை தகுந்த மருந்து. கவலைகளை எண்ணி எண்ணித் துயரப்படாமல் கவலைகளைப் போக்கி முன்னேற்றங்காண இயலவேண்டும்.

திரு. ஆ. துரைராஜசிங்கம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"ஜாதி, மதம், இனம் இவற்றில் சேராத தனிப்பெரும் கலையாக நகைச்சுவை விளங்குகிறது. எல்லாக் கலைகளையும் விடத் தலைநிமிர்ந்து நிற்கும் கலை இதுவாகும்."

யாழ் நகர முதல்வர் எஸ். சி. மகாதேவாவும் உரைநிகழ்த்தினார். நகைச்சுவை நிகழ்ச்சிகள் விழாவில் இடம்பெற்றன.

## இடமாற்றம்

வல்வெட்டித்துறை, ஞாயிறு

கட்டைவேலி ஞானசாரிய கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. வே. சி. பொன்னையா அக்கராயன் அரசினர் தமிழ்ப்பாடசாலைக்குத் தலைமையாசிரியராகப் பதவி உயர்வுபெற்று மாற்றப்பட்டுள்ளார்.

●

வவுனியா, ஞாயிறு

வவுனியா சைவப்பிரகாச வித்தியாலயத்தில் கடமையாற்றிய ஆங்கில ஆசிரியை திருமதி இ. சதாசிவம்பிள்ளை சங்[illegible] இடமாற்றம்செய்யப்பட்[illegible]

# இந்திய நட்சத்திரம் மீட்கப் பட்டது

நியூயோர்க், ஜன. 10

நியூயோர்க் நூதனசாலையிலிருந்து கடந்த வருடம் அக்டோபர்மாதத்தில் திருடப்பட்ட இந்திய நட்சத்திரம் எனப்படும் விலைமதிப்பற்ற நீலக்கல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இக்கல் மியாமி என்ற இடத்திலிருந்து மீட்கப்பட்டு நியுயோர்க்குக்கு கொண்டுவரப்பட்டுவிட்டதாக மாவட்ட அட்டோர்ணி ஜெனரல் பிராங்க் ஹொகன் அறிவித்துள்ளார்.

இந்த விலைமதிப்பற்ற கல், மியாமி புகையிரத லொக்குக்குள் கண்டெடுக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார். இதுசம்பந்தமாக அலைடலியன் என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த அக்டோபர் 29-ந் திகதி நியுயோர்க் நூதனசாலையிலிருந்து விலைமதிப்பற்ற கற்களுடன் 22 மாணிக்க கற்களும் களவாடப்பட்டிருந்தன. ஆனால் இவற்றுள் எத்தனை கற்கள் மீட்கப்பட்டுவிட்டன என்பதுபற்றி எதுவும் அறிவிக்கப்படவில்லை

563 கரட் இந்திய நட்சத்திரமும் சிவப்புக் கல்லும் 100,000 டாலர்கள் பெறுமதி வாய்ந்தவை. நூதனசாலையிலிருந்து திருடப்பட்ட கற்களின் மொத்த பெறுமதி 410,000 டாலர்களாகும்.

# பெங் தலைமையிலுள்ள பயங்கர கொள்ளை கோஷ்டி

## எட்டுப் பேரை கொன்று வங்கிகளை சூறையாடியது

பொகொடா, (கொலம்பியா) ஜன. 10

இங்கிருந்து 300 மைல் தூரத்திலுள்ள கிராமமொன்றை ஒரு கொள்ளை கோஷ்டியினர் தாக்கியதால் மூன்று பொலிஸ வீரர்கள், நிரு இராணுவத்தினர், ஒரு உழவர் உட்பட எட்டுப பேர் மாண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 60 பேர் கொண்ட இந்த பயங்கர கொள்ளைக் கோஷ்டிக்கு மரினா என்ற பெயருடைய ஒரு பெண் தலைமைவகித்தாரென்றும் கொள்ளைக் கோஷ்டியினரிடம் ஏராளமான ஆயுதங்கள் இருந்ததென்றும் பத்திரிகை நிருபர் ஒருவர் அறிவிக்கின்றார்.

இந்த கொள்ளைக் கோஷ்டியினர் முதலில், குறிப்பிட்ட கிராமத்துடனான சகல டெலிபோன் தொடர்புகளையும் துண்டித்துவிட்டு பின்னர் வங்கிகளையும் வியாபார ஸ்தலங்களையும் கொள்ளையடித்தனர் என்று அறிவிக்கப்படுகிறது.

# ஆனையிறவுத்தடையை உடன் நீக்கவேண்டும்

## வெண்காய உற்பத்தியாளர் தூதுக்கோஷ்டி கோரிக்கை

யாழ்ப்பாணம், திங்கள்

"யாழ்ப்பாணத்தில் விளையும் வெங்காயத்தை அரசாங்கப் பிரகாரப்படி அந்தர் ரூபா 31 விலைக்கு விளைபொருள் சங்கத்தைக்கொண்டு எடுக்கச்செய்ய வேண்டும் அல்லது ஆனையிறவுக்குத் தெற்கே யாழ்ப்பாணத்திலிருந்து வெங்காயத்தைக் கொண்டுசெல்லமுடியாதென்றுள்ள தடையை நீக்க வேண்டும்" என்று வேலணை, புளியங்குளம், ஊர்காவற்றுறையில் வெங்காயம் விளைவித்த விவசாயிகள் சார்பாக ஒரு தூதுகோஷ்டியினர் சென்ற சனிக்கிழமை யாழ்ப்பாண அரசாங்க அதிபரிடம் தூது சென்று கேட்டுக்கொண்டனர்.

இதைப்பற்றித் தான் மேலதிகாரிகளுடன் யோசித்துவருவதாயும், ஒரு கிழமைக்கிடையில் இதற்கான நடவடிக்கையை எடுக்கச்செய்வதாயும் அரசாங்க அதிபர் உறுதியளித்ததாகத் தெரிகிறது.

### மூடையுடன் கிணற்றுள் வீழ்ந்தார்

சுழிபுரம், ஞாயிறு

சில்லாலையைச் சேர்ந்த திரு. ம. கதிரவேலு என்பவர், சுழிபுரம் சந்தைக்கு அருகாமையிலுள்ள கிணறு ஒன்றில் ஆயிரத்து ஐநூறு தேசிக்காய் கொண்ட மூடையுடன் வீழ்ந்து தெய்வாதீனமாக உயிர் தப்பினார். சுழிபுரம் சத்தியக்காட்டு சந்தை ஒழுங்கை விஸ்தரிக்கப்பட்டு புதிய தெருவாக்குவதற்கு கல்லுப் பரவப்பட்டுள்ளதால் பாதையால் செல்லமுடியாமலுள்ளது. அயலிலுள்ள மக்களின் உதவியால் கதிரவேலு காப்பாற்றப்பட்டார்.

## 'கடவுளுக்கும் பொறுக்கவில்லை'

நாரமலை, ஞாயிறு

"இலங்கையில் சீர் அற்ற ஆட்சி இருக்கும்போதெல்லாம் கடவுள் நாட்டை அழிக்கவே முற்பட்டிருக்கின்றார். இதை எங்களுக்கு சரித்திரம்உணர்த்திக்காட்டுகின்றது. இன்று ஆட்சி லஞ்ச ஊழலில் சிக்கியிருக்கும் தருணத்தில் தான் அண்மையில் புயல் சூறாவளி வந்து எங்கள் நாட்டை அழித்தது. இந்த நிலையில் தான் கடவுளும் எங்களுக்குப் பாதுகாப்பளிக்க முற்படவில்லை" என்று வணக்கத்துக்குரிய கலுகொண்டயாவி பஞ்ஞசேகரா மகாதேரோ பேசும்பொழுது குறிப்பிட்டுள்ளார்.

### கிணற்றில் விழுந்து மரணம்

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரத்தைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை பெண் வள்ளியம்மை தமது வீட்டிலுள்ள கிணற்றில் தவறுதலாக விழுந்து மரணமானார். வலிமேற்கு மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். சி. நடராசா மரணவிசாரணை நடத்தினார். திருவாளர்கள் க. சிதம்பரப்பிள்ளை, எம். அருள்பிரகாசம், வி. நாகராசா ஆகியோர் சாட்சியம் அளித்தனர். தவறுதலாக கிணற்றினுள் வீழ்ந்ததால் மரணம் சம்பவித்தது எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இலட்சியத்துக்காக தொடர்ந்து போராட வேண்டும்"

## நெல்லியடிக் கூட்டத்தில் திரு. எஸ். ஜே. வி.

உடுப்பிட்டி, சனி

"நாம் ஏன் உடுப்பிட்டித் தொகுதியில் போட்டியிடுகிறேம் என்று எல்லோரும் கேட்கிறார்கள். சென்ற பாராளுமன்றத்தில் திரு சிவசிதம்பரமும் எம்முடன் ஒத்துழைத்தது. அவர் தமக்குக் கீர்த்தியைத் தேடிக் கொண்டார். அவரை அரசியலில் வளர்த்தது தமிழரசுக்கட்சி. நாம் அவரை எமது கட்சியில் சேரும்படி கேட்டோம். திரு ஜெயக்கொடியும் கேட்டார். அவர் மறுத்துவிட்டார். நாங்கள் தமிழ்பேசும் மக்களின் இலட்சியத்திற்காக உழைப்பவர்கள். ஆகையினால் உடுப்பிட்டித் தொகுதிக்கு திரு. ஜெயக்கொடியைத் தெரிந்து அனுப்பும்போது அவரை மாத்திரமல்ல அவரது கட்சிக்கும் கொள்கைக்கும் ஆதரவு கொடுப்பதாகும். நாங்கள் அனைவரும் ஒரு குழுவாகப் பாராளுமன்றம் செல்ல வேண்டும். எமது இலட்சியங்களுக்காகத் தொடர்ந்து போராட வேண்டும்.

இவ்வாறு தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் திரு க.ஜெயக்கொடியை ஆதரிக்குமுகமாக நெல்லியடியில் நடைபெற்ற கூட்டத்திற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

மல்லாகம் புரக்டர் திரு. ச. நடராசா பேசுகையில் வேறு ஒரு விஷயங்களிலும் பங்குபற்ற முடியாத நிலையிலேயே திரு. சிவசிதம்பரம் தமிழரசுக் கட்சியுடன் சேர்ந்து இயங்கினார் என்றார்.

வட்டுக்கோட்டை முன்னாள் எம். பி. திரு. அமிர்தலிங்கம் பேசுகையில் "நான் எனது மனைவியை இராணுவத்தினர் ஜீப்பில் ஏற்றும்போது போட்டோ பிடித்தேன் என்று சிலர் கூறுகிறார்கள். நான் அங்கோத்துக்கு காமராவும் கையுமாக நின்றேனா? திருமதி அமிர்தலிங்கம் சார்பாக சுமுகமான இன்னும் நடிக்க அடி ... போலீசார் அடித்தஅடி இன்னமும் வலியை ஏற்படுத்திக்கொண்டு தான் இருக்கிறது. அவரை என் கிழுடயவை காலால் ஏறி மிதித்துக் கொண்டு சென்றார். இவ்வளவு துன்பங்களுக்கிடையேயும் தமிழரசுக்கட்சி பல போராட்டங்களை நடத்தி தமிழினத்தின் வாழ்வுக்காகப் பாடுபட்டது. இந்த அடிகளைப் பற்றியெல்லாம் நாம் மேடைகளில் சொல்லித் திரிகிறோமா? என்று கேட்டார்.

கிளிநொச்சி அபேட்சகர் பண்டிதர் திரு. க. பொ. இரத்தினம் பேசுகையில் திரு. சிவசிதம்பரம்மீது தனக்குத் தனிப்பட்ட கோபம் கிடையாதென்றும் ஆனால் இன உரிமையையும் மொழிப் பிரச்சினையையும் சிந்தித்துப் பார்க்கும்போது தமிழரசுக் கட்சிதான் தமிழினத்திற்கு ஏற்றதாகவுள்ளதென்றும் இன்றுள்ள ஒரு கட்டுக்கோப்பான கட்சி தமிழரசுக்கட்சியேயென்றும் கூறினர்.

உடுப்பிட்டித் தொகுதி தமிழரசு அபேட்சகர் திரு. க. ஜெயக்கொடி பேசுகையில் "வருங்காலச் சிறார்களின் கஷ்டநிலையை உணர்ந்ததால் இத்தொகுதியில் போட்டியிடுவதாகவும் கடந்த தடவை தோல்வியுற்றபோதிலும் தனது கடமையை தான் மறக்கவில்லையென்றும் அதுபோலவே இம்முறையும் தனது சேவையைத் தொடர்ந்து செய்வதாகவும் கூறினர்.

திரு. க. துரைரத்தினம், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், செல்வன் க. பரஞ்சோதி ஆகியோரும் மற்றும் பலரும் பேசினர்.

புலோலி வாலிபர் சங்கத்தினரால் உடுப்பிட்டித் தொகுதி அபேட்சகர் திரு. ஜெயக்கொடியின் தேர்தல் கட்டுப்பணம் கட்டப்பெற்ற ரசீது வழங்கப்பட்டது.

ஆரம்பத்தில் திரு. செல்வநாயகம், திரு. க. துரைரத்தினம், திரு. அமிர்தலிங்கம் ஆகியோர் உடுப்பிட்டியிலிருந்து கூட்ட மைதானத்திற்கு ஊர்வலமாக அழைத்துவரப்பட்டனர். இவ்வூர்வலத்தின் முன்பாக அடிமை விலங்கு பூண்ட தமிழ்த்தாயின் உருவப்படம் கொண்டுவரப்பட்டது. கரணவாய் கல்லுவத்திலிருந்து திருமதி மங்கையர்க்கரசியின் ஊர்வலமும் துன்னாலையிலிருந்து திரு ஜெயக்கொடியின் ஊர்வலமும் வந்தன.

---

## மறைவுக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், திங்கள்

"பொதுஸ்தாபனங்களுக்கும் கிராமத்தின் வளர்ச்சிக்கும் பெரிதும் பாடுபட்ட திரு. மு. கதிர்காமரின் மறைவு ஈடுசெய்ய முடியாத நஷ்டமாகும். அவரின் பிரிவு இணுவில் மக்களின் முன்னேற்றத்துக்கு ஏற்பட்ட பெரும் தடையாகும்" என்று இணுவில் ஸ்ரீ சிவகாமசுந்தரி சனசமூக நிலையத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் நிலையச் செயலாளர் திரு. இ. குநாதன் பேசுகையில் கூறினர்.

காலஞ்சென்ற திரு. கதிர்காமரின் உருவப்படத்தை நிலைய மண்டபத்தில் திரைநீக்கம் செய்வதென்று கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. அன்னாரின் சேவையைப் பாராட்டி பலர் பேசினர்.

---

## 'மாணவர்களுக்கு ஒழுக்கம் வேண்டும்'

கொழும்பு, ஞாயிறு

"மாணவர்கள் கீழ்ப்படிவுள்ளவர்களாகவும்—ஒழுக்கமுள்ளவர்களாகவும் நடந்துகொள்ளவேண்டும்" என்று வித்தியாலங்கார உபவேந்தர் வண. பாக்ஸ்சார மகாநாயக தேரோ வருடாந்த பரிசளிப்பு விழாவில் பேசும்பொழுது குறிப்பிட்டார்.

முன்னாள் கல்விப் பகுதி பாராளுமன்றக் காரியதரிசி திரு. எஸ் டீ. சூரியாராச்சி பேசும்பொழுது, மாணவர்கள் நல்லவர்களாகவும் நல்ல முடிவுகளைச் செய்யக்கூடியவர்களாயும் இருக்கவேண்டும் என்று கூறினர்.

---

## போட்டியில்லை

கொழும்பு ஞாயிறு

ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரசின் செயற்குழுக் கூட்டத்தில் எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐ. தொ. கா. போட்டியிடுவதில்லையென தீர்மானிக்கப்பட்டது.

(5-ம் கலத் தொடர்ச்சி)

மாகாணங்களிலும் தமிழர்கள் உத்தியோகம் பார்க்காவிட்டால் அவர்களது பொருளாதாரம் குறைந்துவிடும். இதைத் தவிர வேறு வழிமுறைகளோ இல்லை. மொழிப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வட்டமேசை மகாநாடு ஒன்று கூடுவோம் என்று நான் கூறியபோது திரு. செல்வநாயகம் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை."

உடுப்பிட்டி முன்னாள் எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

"இலங்கை முழுவதும் தமிழுக்கும் சிங்களத்திற்கும் சம அந்தஸ்துக் கிடைக்கவேண்டிய நிலைமாறி எமது தாய்மொழியைப் பேசவும் ஸ்ரீமாவின் அனுமதியைப் பெற வேண்டியிருக்கிறது. தமிழ் அரசாங்க ஊழியர்கள் தனிச் சிங்களம் கட்டாயம் படிக்க வேண்டும் என்று பாராளுமன்றத்தில் கூறப்பட்டபோது தமிழ் மக்கள் தெரிந்து விட்ட 16 அங்கத்தவர்களும் ஊமைகளாக இருந்தார்கள். பாராளுமன்றத்தில் திரு ஜி. ஜி. பொன்னம்பலம் இருந்து இச்சட்டம் கொண்டுவரப்பட்டிருந்தால் அரசாங்கம் கிடு கிடுத்திருக்கும்.

வவுனியா முன்னாள் எம். பி திரு ரி. சிவசிதம்பரம் பேசுகையில், தமிழர்களுக்கு விடுதலை வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடனே காங்கிரஸில் சேர்ந்ததாகவும் மங்கிப்போன காங்கிரசுக்குப் புதுவாழ்வளிக்க வேண்டுமென்றும் கூறினார்.

காங்கேசன்துறை காங்கிரஸ் அபேட்சகர் திரு. குமாரசூரியர் பேசுகையில் எல்லாம் தமிழியக்கம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் திரு. செல்வநாயகம் தனக்கு ஆங்கிலத்தில் கடிதமெழுதியதாகவும் சத்தியாக்கிரகத்தில் சேர்த்த பணமும் பணத்தை வைத்துப் புதிய தொழில்களை ஆரம்பிக்க தமிழரசுக் கட்சியினர் விரும்பவில்லை என்றும் கூறினர்.

உடுவில் தொகுதிக் காங்கிரஸ் அபேட்சகர் திரு. என். சிவனேசன் பேசுகையில் எங்களின் உரிமையைச் சிங்களவரின் பரிபூரண சம்மதமின்றி பெறமுடியாதென்றும் எதிரியின் மனதை மாற்றுவதே சத்தியாக்கிரகத்தின் நோக்கம். ஆனால் தமிழரசுக் கட்சியின் சத்தியாக்கிரகக் கோட்பாடுகள் யாவும் தவறானவையென்றும் கூறினர்.

திருவாளர்கள் எஸ். கணேசமூர்த்தி, பருத்தித்துறை காங்கிரஸ் அபேட்சகர் எஸ். நடராசா, புறக்டர் சிவபாதம், பி. சிறிதரன் ஆகியோரும் பேசினர்.

ஆரம்பத்தில் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் அல்வை முத்துமாரியம்மன் கோவிலடியிலிருந்தும், திரு. எம். சிவசிதம்பரம் மந்திகையிலிருந்தும் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டனர்.

---

# அரசியல்நெருக்கடிக்கு முற்றுப்புள்ளி?

## தென்வியட்நாமில புதிய உடன்படிக்கை கைச்சாத்து

சைகோன், ஜன. 10

தென்வியட்னாம் அரசியல் அமைப்பு சம்பந்தமாக இராணுவத் தலைவர்களுக்கும் அரசாங்கத்துக்கு மிடையே ஒரு உடன்பாடு ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில வாரங்களாக தென்வியட்நாமில் நிலவிய அரசியல் நெருக்கடிக்கு இந்த உடன்பாடு ஒரு முற்றுப் புள்ளியாகும் என்று அவதானிகள் கருதுகின்றனர்.

இந்த உடன்படிக்கையைத் தொடர்ந்து சிவில் அரசாங்கத்துக்கு அதிக உரிமைகள் கிடைக்கும் அண்மையில் தென் வியட்நாமில் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களில் கைது செய்யப்பட்ட மாணவர்களும் மற்றும் பலரும் சிவில் அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்படுவார்கள். இவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

### அமெரிக்கா வரவேற்பு

தென்வியட்நாமில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிக்கு தீர்வு ஏற்படும் வகையில் செய்து கொள்ளப்பட்ட உடன்பாட்டை தென்வியட்நாமிலுள்ள அமெரிக்க ஸ்தானிகர் வரவேற்றுள்ளார்.

---

# "உடுப்பிட்டியில் என்னுடன் எஸ்.ஜே.வி. போட்டியிடட்டும்"

## தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் திரு. ஜி. ஜி. பேச்சு

உடுப்பிட்டி, ஞாயிறு

"இத்தனை வருடங்களுக்குப் பிறகும் வடமராட்சி மக்கள் எம்மை வரவேற்பதைப் பார்த்தால் தமிழ்ச்சாதி எங்களுக்குப் பிறகும் வாழும் என்பது தெளிவாகிறது. ஒரே அரசியல் மேடையில் பத்து அபேட்சகர்களைச் சேர்க்கக் கூடிய தகுதி வேறு எந்தக் கட்சியிடம் உள்ளது? அரசியலில் ஈடுபட்டால் நான் இறந்துவிடுவேன் என்று ஓர் பத்திரிகை (ஈழநாடு அல்ல) சாதகபலன் கூறியுள்ளது. இறப்பு எல்லோருக்கும் பொதுவானதே. ஆனால் இறக்கும் வரை நானும் எனது மக்களும் சத்தியுள்ளவர்களாகவே இருப்போம். தமிழ் இனத்தின் உரிமை இந்தத் தேர்தலிலதான் நிச்சயிக்கப்படும் என்பதை நன்கு உணர்ந்து முழுப் பகுதிகளிலும் திறமைசாலிகளை அனுப்புங்கள் என்று கூறியபோது திரு செல்வநாயகம் அதை மறுத்து ஏன் போட்டிக்குப் பயப்படுகிறீர்கள்? என்று கேட்டாராம். நான் போட்டிக்குப் பயந்தவனல்ல பயம் என்பது எனது சரித்திரத்திலேயே கிடையாது. வேண்டுமானால் நான் உடுப்பிட்டித் தொகுதில் போட்டியிடுகிறேன் திரு. செல்வநாயகம் என்னுடன் போட்டியிடட்டும்" இவ்வாறு அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு ஜி. ஜி. பொன்னம்பலம் அல்வாய் மாலிசந்திப் பிள்ளையார் கோவிலுக்கருகாமையில் உடுப்பிட்டித் தொகுதி காங்கிரஸ் அபேட்சகர் திரு மு. சிவசிதம்பரத்தை ஆதரிக்கும் முகமாக நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

### 'உத்தியோகம் இல்லையேல் வாழ்வில்லை'

"முழு இலங்கையிலும் சிங்களவருக்குக் கிடைக்கும் உரிமை போன்றே தமிழ் மக்களுக்கும் கிடைக்கவேண்டும் என்பதே எமது கொள்கை. நூற்றுக்கணக்கான தமிழ் பட்டதாரிகளுக்கும் ஆயிரக்கணக்கான படித்த வாலிபர்களுக்கும் வேலையில்லை; இன்று கல்வித்துறையில் மிகச் சிறந்து விளங்குபவர்களே வெளிநாடு செல்கிறார்கள். சமஷ்டி என்பது கிடைக்காதவொன்று. 1958-ல் பண்டாரநாயக்கா ஆட்சியில் தமிழ்ப் பெண்களையும் ஆண்களையும் சிங்களவர் அவமானப் படுத்தியனுப்பிய பின்னரும் பொருளாதாரம் வேண்டி உத்தியோகம் பார்க்கச் செல்லவில்லையா? இதன் பின்னரும்சமஷ்டி கிடைக்குமா? வடக்கு,கிழக்கு

(3-ம் பலம் பார்க்க)

REGAL – JAFFNA
NOW SHOWING
James Darren
in
GIDGET GOES TO ROME
(Scenic color)

ராஜா சினிமா
(சுழிபுரம்)
கே. ஆர். மகாலிங்கம்–ருக்மணி
நடிக்கும்
ஸ்ரீ வள்ளி

மனோகரா (யாழ்ப்பாணம்)
போன்: 485
6-30—9-30க்கும்
பாஸ்போட் (ஹிந்தி)
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)
[illegible]
NAYOKA and the TIGER MEN

2வது வெற்றி மாதம்!
வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
மாலை 2-30 இரவு6-30,9-30க்கும்
டி. எம். சௌந்தரராஜன்
நடிக்கும்
பட்டினத்தார்

3-வது வெற்றி வாரம்!
கிங்ஸ்லி (கொழும்பு) | பிளாசா (வெள்ளவத்தை) | நவா (கொம்பனித்தெரு)
விஜயா (மட்டக்களப்பு) | மோடேர்ன் (பதுளை) | ராஜ் (கீர்கொழும்பு)
14-ந் திகதி தொடக்கம்
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
சிவாஜி கணேசன் - சாவித்திரி
மற்றும் பலர் நடித்த
கர்ணன்
(ஈஸ்ட்மென் கலர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "காங்கிரசுக்கும் சுயேச்சைக்கும் அளித்த சந்தர்ப்பம் கட்சிக்கும் அளிக்க வேண்டும்"

— சி. எக்ஸ். மார்ட்டின்

யாழ்ப்பாணம், திங்கள்

1947-ம் ஆண்டிலும் 1952-ம் ஆண்டிலும் 1956-ம் ஆண்டிலும் திரு ஜி. ஜி பொன்னம்பலத்துக்கும் 1960-ம் ஆண்டில் திரு அல்பிரட் துரையப்பாவுக்கும் சந்தர்ப்பம் கொடுத்து பார்லிமெண்டுக்கு அவர்களைத் தெரிவுசெய்து அனுப்பிய யாழ்ப்பாணம் தொகுதி மக்கள் இம்முறை தமிழரசுக்கட்சிக்கும் அதன் அபேட்சகரானதனக்கும் ஒரு சந்தர்ப்பம் தர வேண்டும் என்று யாழ்ப்பாணத் தொகுதியில் தமிழரசுக் கட்சி அபேட்சகராகப் போட்டியிடும் திரு. ஸி எக்ஸ். மார்ட்டின் நேற்று முன்தினம் இரவு யாழ்ப்பாணம் கோட்டை மைதானத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசுகையில் கேட்டுக் கொண்டார்.

தமிழரசுக் கட்சித் தலைவர் திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர். திரு. மார்ட்டின் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

சென்ற பல வருடங்களாகத் தமிழரசுக்கட்சியின் அனுதாபியாக இருந்து வந்தேன். நான் நீதிபதியாகக் கடமையாற்றிய போதிலும் கிடைத்த சந்தர்ப்பங்களில் தமிழ்பேசும் மக்களுக்காகப் பணியாற்றியிருக்கிறேன். தமிழரசுக்கட்சியின் நடவடிக்கைகளை அவதானித்து அது ஒன்றுதான் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை பெறுவதற்காக உழைக்கிறது என்பதை உணர்ந்து அதில் சேர்ந்தேன். ஜனநாயகத்தையும் மக்களின் சுதந்திரத்தையும் காப்பாற்றுவதே எங்களது நோக்கம் என்று இப்பொழுது சிலர் கூறுகின்றனர். தமிழரசுக்கட்சியின் நோக்கமும் இதுதான் என்பது மட்டுமல்ல செயலிலும் அது காட்டியுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் லங்கா சமசமாஜக்கட்சியும் சேர்ந்து கூட்டு அரசாங்கம் அமைத்த சில தினங்களுக்குப் பின் அடுத்த தேர்தல் நடைபெறாது என்றும் அதற்கான திட்டங்களை வகுத்து பார்லிமெண்டில் தமிழரசுக்கட்சியின் ஆதரவுடனும் ஒத்துழைப்புடனும் ஒரு தீர்மானத்தை அரசாங்கம் நிறைவேற்றவிருப்பதாக ஒரு வதந்தி கிளம்பியது. அச்சமயத்தில் தமிழரசுக்கட்சித் தலைவர் திரு செல்வநாயகம் ஒரு அறிக்கையின் மூலம் ஜனநாயக சுதந்திரம் நாளை முக்கியம் என்றும் அதற்கு தீங்கு நேரிடுவதற்குத் தமிழரசுக்கட்சி துணைசெய்யாது என்றும் வெளிவுபடுத்தினார். பத்திரிகை மசோதா கொண்டு வரப்பட்டபோது பத்திரிகைச் சுதந்திரம் ஜனநாயகத்துக்கு மிக முக்கியமானதென்றும் அதை எதிர்க்க வேண்டியது அவசியமென்றும் எல்லாருடனும் சேர்ந்து தமிழரசுக்கட்சியும் எதிர்த்தது. இவைகளின் மூலம் ஜனநாயக சுதந்திரத்தை தமிழரசுக்கட்சி சொல்லில் மட்டுமல்லாது செயலிலும் பாதுகாத்திருக்கிறது.

### பொதுவான கொள்கை வேண்டும்

தேர்தல் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட வேண்டும் என்றும் அதன்மூலம் ஒற்றுமை ஏற்படவேண்டுமென்றும் இப்பொழுது கூறுகின்றனர். வேறுபட்ட கொள்கையுடையவர்களும் ஒருவருடைய கொள்கையை வன்மையாகக் கண்டிப்பவர்களுடனும் எப்படி ஒற்றுமையோ, ஒப்பந்தமோ ஏற்பட முடியும்?

சாவகச்சேரி முன்னாள் எம். பி. திரு வி. என். நவரத்தினம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

பாராளுமன்றத்துக்குச் செல்வதால் மட்டும் எமது உரிமைகளைப் பெற்று விடமுடியாது. பாராளுமன்றத்துக்கு வெளியேயும் நாம் போராட்டம் நடத்த வேண்டும். அதன் மூலமே நாம் எமது உரிமைகளைப் பெறமுடியும்.

திறமைசாலிகளையே பாராளுமன்றத்துக்கு அனுப்பவேண்டும் என்று சிலர் இப்பொழுது கூறுகின்றனர். ஒவ்வொருவரும் தமது தொழிலில் தனது வலிமையில் திறமைசாலிகளாக இருக்கலாம் ஆனால் ஒரு சமூகத்தின் உரிமையைப் பெறுவதற்கு தனிப்பட்டவரின் திறமையினால் எதுவித பயனும் கிடைக்காது. தியாகத்தின் மூலமே உரிமையைப் பெறமுடியும் எனவே தமிழ் பேசும் மக்களிடையே தியாக உணர்ச்சியை ஊட்டி ஒற்றுமையை ஏற்படுத்திய தமிழரசுக் கட்சியே உரிமைகளைப் பெற்றுத்தரக் கூடிய கட்சி அது ஒரு ஸ்தாபனம் அது தனிமனிதரல்ல அதையே மக்கள் ஆதரிக்கிறார்கள். இனியும் ஆதரிப்பார்கள் என்பது திண்ணம்.

உடுப்பிட்டி முன்னாள் எம். பி. திரு சிவசிதம்பரம் தமிழரசுக் கட்சியுடன் உரிமைப் போராட்டங்களில் ஒத்துழைத்தவர். அவரைப் பற்றி தமிழரசுக் கட்சிக்குள்ளேயே சிலர் சந்தேகம் கொண்ட போதிலும் நானும் மற்றும் சிலரும் சந்தேகம் கொண்டதில்லை. இப்பொழுதும் ஐயம் கொள்ளவில்லை. சேர்க்கையாலோ சந்தர்ப்ப சூழ்நிலையாலோ இன்று அவர் எமக்கு மாறாக பிரசாரம் செய்யக் கூடும் என்றாலும் அவரை ஒரு தலைமைப் பீடத்தில் வைத்துக் கணிக்கும் நான் அவரைச் சீழைவழிக்குக் கொண்டு போகாமல் சுதந்திரமாக, சுயேச்சையாக விடும்படி அவரைச் சேர்த்து வைத்துள்ளவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கிளிநொச்சித் தொகுதி அபேட்சகர் பண்டிதர் க. பொ. இரத்தினம், பருத்தித்துறை முன்னாள் எம். பி. திரு. க. துரைரத்தினம், வட்டுக்கோட்டை முன்னாள் எம். பி. திரு அ. அமிர்தலிங்கம் உட்பட மற்றும் பலரும் பேசினர்.

## புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாண முஸ்லிம் சனசமூக நிலையத்தின் 15-வது வருடாந்தக் கூட்டம் சங்க நிலையத்தில் கூட்டப்பட்டது. கூட்டத்துக்கு சங்க அங்கத்தவர்கள் அனைவரும் சமுகமளித்திருந்தனர். பல முக்கிய விஷயங்கள் ஆராயப்பட்டபின் பின்வருவோர் புதிய உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: எஸ ஏ சி சாகுல் ஹமீது; உபதலைவர்: எஸ ஏ சி தௌஹீத்; காரியதரிசி. எம் யு அப்துல்லாஹ்; உபகாரியதரிசி. எஸ ஏ சி மஃறூப்; தனாதிகாரி: எம் ஏ சி ஜமால்தீன்; உபதனாதிகாரி: ஜே எம் எஸ் ஹமீட்; நூலக பொறுப்பாளர்: எம் எஸ் தௌஹீத்; விளையாட்டுக்காரியதரிசி: எம் ஐ எம் சாபி; உபவிளையாட்டுக்காரியதரிசி: எஸ பாரூக்; பால்விநியோகப் பொறுப்பாளர்: எம் டி இபுறுகிம்; விலையப் பொறுப்பாளர்; எம் எம் யூசுப்.

நிர்வாக அங்கத்தவர்கள்

எம் எம் சாகுல்ஹமீட், எம் எஸ இபுறுகீம், எம் ஏ பசீர், எஸ எம் ..., எம் சாலி, எம் எஸ ஏ நகீம், எம் ரசாக், கணக்குப் பரிசோதகர்- கே எம். ஹமதூன்.

# "தந்தையைக் காணவில்லை; சகோதரனும் திரும்பவில்லை 3 குடும்பங்களை காப்பாற்றும் பொறுப்பு இனிமேல் எனக்கே"

## கடலில் தத்தளித்தவரின் சோகவரலாறு

மாவிட்டபுரம், ஞாயிறு

"குருவளியில் சிக்குண்டு நடுக்கடலில் தத்தளித்த என்னின் சோகக் கதையை, வெறும் வார்த்தைகளால் சொல்லமுடியாது ஒவ்வொரு அனுபவமும், எங்களுக்கு ஏற்பட்ட சம்பவங்களும் மிகவும் பயங்கரமானவை. நினைத்துப் பார்க்கவும்முடியாதவை ஆனால் இவையெல்லாம் எனக்குப் பெரிதாகத் தெரியவில்லை மூவருடன் கடலுக்குச் சென்ற நான் இப்பொழுது மற்றவர்களைப் பறிகொடுத்து மூன்று குடும்பங்களைப் பாதுகாக்க வேண்டிய கட்டத்தில் இருக்கின்றேன். அந்த மலைபோன்ற அலைகளுக்கு நான் இரையாகியிருந்தாலும் பரவாயில்லை, இன்று கடலில் தத்தளித்ததிலும் மோசமான நிலைமை எனக்கு ஏற்பட்டுள்ளது. இனி என்னைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்."

கடந்த மாதம் 22-ம் திகதி இரவு குருவளியில் சிக்குண்டு கடலில் தத்தளித்த ஊபதிப்பிள்ளை பொன்னம்பலம் (24 வயது) என்பவரை "ஈழநாடு நிருபர் பேட்டி கண்டபொழுது அவர் தெரிவித்தவைதான் மேலே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

கலங்கிய கண்களுடன் காட்சியளித்த அவர் தமது அனுபவங்களைக் கூறிக் கொண்டு போகும்பொழுது சில சந்தர்ப்பங்களில் உண்மையிலேயே மனமுருகிவிட்டார் தமது சோகக் கதையை அவரே இங்கு விபரிக்கின்றார்:

"நான் விவாகமானவன். இரு பெண் குழந்தைகள் உண்டு கடந்த மாதம் 22-ம் திகதி மாலை நெடுந்தீவு வெளிக் கரையிலிருந்து "ஜோதிலிங்கம்" என்ற வள்ளத்தில் நானும் எனது இளைய சகோதரனான ஐயாத்துரை சின்னத்தம்பியும், மடுதீன் சின்னராசவும் தொழிலுக்குப் புறப்பட்டோம் ஒருகட்டத்தில் வலையை வீசிவிட்டு சப்பிட்டுவிட்டு வள்ளத்தில் நித்திரை செய்தோம். இரவு 12 மணியிருக்கும் சின்னத்தம்பி எனது பெயரைச் சொல்லிக் கத்தினார். நான் திடுக்குற்று எழுந்தேன். அப்பொழுது காற்று பலமாக வீசிக் கொண்டிருந்தது. எல்லோரும் என்ன செய்வதென்று தெரியாது விழித்துக்கொண்டிருந்தோம் அச்சமயம் மழையும் தூறிக் கொண்டிருந்தது. அலைகள் எழுந்து வள்ளத்தில் விழுந்து கொண்டிருந்தன பாய்மரக் கம்பமும் அமிழ்த்துவிடப்பட்டது இயந்திரத்தை இயக்கச் செய்து சொற்ப வேகத்தில் வள்ளத்தைச் செலுத்திக் கொண்டிருந்தோம். ஆனால் எதிரே வந்து எங்கள் மீது விழுந்த பெரும் அலையினால் என்ஜினும் நின்றுவிட்டது. எங்கள் தலை சுற்றியது. என்ன செய்வதென்று தெரியாமல் அல்லல் பட்டுக் கொண்டிருந்தோம் இப்படியான ஒரு கட்டத்தில்......

மலைபோல அலையொன்று வந்து எங்கள் இதயக்கல்—வள்ளத்தில் விழுந்தது அந்தோ! வள்ளம் கவிழ்ந்து விட்டது, நானும் சின்னத்தம்பியும் வள்ளத்திற்கு வெளியில்—கடலில் விழுந்தோம். ஆனால் சின்னராசாவை நிலை எனக்குத் தெரியவில்லை எனக்கும் சின்னத்தம்பி அண்ணாவுக்குமிடையே ஆறடி வித்தியாசம் இருந்திருக்கும் அவர் "தம்பீ" என்றார். நான் "அண்ணா" என்றேன். சில செகண்டுகள் மறைந்தன. பயங்கர பேரிரைச்சல்கள், ஒரே இருட்டுக்காடு! வாழ்வா? சாவா? என்ற கட்டத்தில் சுழன்று கொண்டிருந்தோம்.

மீண்டும் "தம்பீ" என்றார். நானும் "அண்ணா" என்றேன். அந்தோ அவரைப் பின்னர் காணவில்லை. அவரின் சத்தமும் என் காதில் விழவில்லை. அவர் மறைந்துவிட்டார்.

என் இதயம் 'திக்திக்' என்றது. அதன் வேகம் அதிகரித்தது. வெடித்துவிடக்கூடாதா என்று ஒருகணம் சிந்தித்தேன்: என்னுடன் வந்த மற்றவர்களைக் காணாது என் நினைவுகள் பயங்கர எண்ணங்களை நினைத்தது. எனது பெண் பிள்ளைகளின் கதி என்ன... என்று அழுதேன். இனித் தப்பமாட்டேன் என்று முடிவு செய்துவிட்டேன். எனது உற்றார் உறவினர்களை ஒருமுறை நினைத்துக்கொண்டேன், என் உடலைக்கூட அவர்கள் காண முடியாதாவென்று ஏங்கினேன். எனக்கு ஏற்பட்ட இந்தக் கதி மற்றவர்களுக்கு வந்துவிடக்கூடாதென்று வேண்டிக்கொண்டேன். இனி எங்கு நான் உயிர் மீளப்போகிறேன் என்று ஏங்கிக்கொண்டிருந்த சமயத்தில் என் குழந்தைகளின் ஞாபகம்வந்தது அப்

(3-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத்தொடர்ச்சி)

பொழுது எதிர்பாராதவிதமாகக் கடலில் மிதந்துவந்த உசல் வைக்கும் மரப்பெட்டியொன்றைக் கண்டேன். அந்தப் பெட்டியை நெஞ்சுடன் அணைத்தேன். அலை தள்ளும் திசைவழியாக சென்றுகொண்டிருந்தேன். எனது அருகில் எவரும் இருக்கவில்லை என்னுடன் கூடவந்தவர்களையும் காணவில்லை. கடவுளைப் பிரார்த்தித்தேன். எனது இரு குழந்தைகளைக் காப்பாற்று முருகா என்று கத்தினேன் அழுதேன்,

பயங்கரமான அந்தக் கடல் எனக்குப் பயத்தை கொடுக்கவில்லை. தனிமை எனக்கு அச்சத்தைத் தரவில்லை. ஆனால் இரண்டு வயது மூன்று மாதமுள்ள இரண்டு பெண்குழந்தைகளையும் நினைத்துத்தான் நான் கண்கலங்கினேன். குழந்தைகள் கண்முன்னே தோன்றி மறைந்துகொண்டிருந்தனர். 'அப்பா' என்றழைக்கும் எனது மகளின் மழலைமொழியைக் கேட்கமாட்டேனா என்று அழுதேன், கத்தினேன், அவர்களுக்கு இனி யார் கதியென்று யோசித்தேன். ஆனால் கடவுள் என்னைக் கைவிடவில்லை

அடுத்த நாள் புதன்கிழமை காலை பத்துமணியிருக்கும் பொழுதும் புலர்ந்துவிட்டது ஆனால் எந்தக் கரையும் எனது கண்களுக்குத் தெரியவில்லை பெட்டியை அணைத்தபடி நெஞ்சாலும், கால்களாலும் தொடர்ந்து நீந்திக்கொண்டிருந்தேன். புதன் கிழமை முழுவதும் எனது கண்களுக்கு எவருமே தென்படவில்லை. அடுத்தநாள் வியாழக்கிழமை மாலை நெடுந்தீவு வெளிக் கடற்கரை தெரிந்தது. கரைக்கும் எனக்கும் சுமார் இரண்டு மைல் தூரம் இருக்கும். அப்பொழுது ஒரு வள்ளத்தையும், சிலரையும் கண்டேன். என்னால் முடியுமானவரை கத்தினேன், கைகளை உயர்த்தினேன். என்னைக் கண்டுவிட்டார்கள் அந்த வள்ளத்திலிருந்த ... பதிப்பிள்ளை முருகுப்பிள்ளை, வடிவேலு இரத்தினம், செல்லையா நாகரத்தினம் ஆகிய மூவரும் எனக்கு அருகில் வந்து என்னைத் தூக்கி வள்ளத்தில் போட்டனர். அப்பொழுதுதான் நான் தப்பிவிட்டேன் என்ற உணர்வு ஏற்பட்டது.

இதன் பின்னர் நெடுந்தீவுக்குக் கொண்டுசெல்லப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டேன். பின்னர் ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரிக்கும் அதன் பின்னர் மானிப்பாய் ஆஸ்பத்திரிக்கும் கொண்டுசெல்லப்பட்டேன். எனக்கு மொத்தம் 25 ஊசிமருந்துப் போடப்பட்டது எனது நெஞ்சுப்புண் இன்னும் மாறவில்லை அது மாறுவதற்கும் ஒருமாதம் எடுக்குமாம்.

எனது மூத்த சகோதரன் ஒருவன் ... தில் சென்றவர் இன்னும் வீடு திரும்பவில்லை அவருக்கு மூன்று பிள்ளைகள் உண்டு. அவரின் மனைவியும் கர்ப்பிணி. எனது தந்தை கந்தப்பிள்ளை கணபதி, பிள்ளையும் ... சென்றவர் இன்னும் திரும்பவில்லை இப்பொழுது எனது குடும்பத்துடன் மூன்று குடும்பங்களைக் காப்பாற்ற வேண்டியநிலை எனக்கு ஏற்பட்டுள்ளது நான் பிழைத்திருக்கத் தேவையில்லை.

அண்ணன் பிழைத்திருந்தாலும் அவர் எல்லாக் குடும்பங்களையும் நன்றாகப் பார்ப்பார் எனக்குச் சகோதரிகளும் 2 சகோதரர்களும் இருக்கிறார்கள், எல்லாமே பெரும் சுமையாக என்மீது விழுந்திருக்கிறது.

நான் ஏன் தப்பினேன்! நான் கட்டாயம் இறந்திருக்க வேண்டும். சகோதரனும், தந்தையும் ... எப்படி ... தான் மலர முடியும்?"

மரண விளம்பரம்

அஞ்சலி

திரு. சு. நமசிவாயம்

இழைப்பாறிய பிரதம புகை பிரத பாதுகாப்பாளர் - அவர்கள் பரமபதமடைந்த மூன்றாவது ஆண்டு நிறைவு நாள் இன்று. அவரை நினைத்து அவர் குடும்பத்தார் கண்ணீர் மல்க சிரம் தாழ்த்தி அஞ்சலி செய்கிறோம். "பிருந்தாவனம்" காவற்குழி- 1425

பொங்கல் வாழ்த்து

பல சைஸ்களில், அழகிய வர்ணப்படங்களடங்கிய பொங்கல் வாழ்த்து விற்பனைக்குண்டு மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். தமிழ்ப்பண்ணை, யாழ்ப்பாணம். 1422

விற்பனைக்கு

இருபது வருடங்கள் வியாபாரம் நடத்திவந்த எனது சிற்றுண்டிச்சாலையை இதற்குள்ள தளபாடசாமான்களுடன் அறுதியாய் விற்பனை செய்ய இருக்கின்றேன் விரும்புவோர் விலாசத்தாருடன் நேரில் தொடர்பு கொள்ளவும். ஆ. சுப்ரமணியம், நம். 27, முன்வீதி, யாழ்ப்பாணம். குறிப்பு: யாழ்ப்பாணம்மாநகரசபைக்கு முன்பாக. 1420

யாழ்ப்பாணம் அம்பலவாணர் வீதியிலுள்ள குடியிருப்புக் காணி பரப்பு 2 குழி 65/8 விற்பனைக்குண்டு விபரங்களுக்கு: S P. பொன்னுச்சாமி, 126/1, அம்பலவாணர் வீதி, யாழ்ப்பாணம். 1421

நல்ல நிலைமையிலுள்ள CN 1182 A 40 விற்பனைக்குண்டு. விபரங்கள்: "மல்லிகை வாசா", அராலி வடக்கு, வட்டுக்கோட்டை. 1423

நல்லூர் செட்டித்தெருவில் 6 1/2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. நல்ல நிலையில் உள்ள EL தொடர்பிலக்க மொறிஸ் மைனர் கார் விற்பனைக்குண்டு. நேரில் தொடர்புகொள்ளவும். க. தர்மலிங்கம், கீரிமலை மடம். 1426

நவில்ட் செவிடர் குருடர் பாடசாலை கைதடி

புதிய மாணவரைச் சேர்ப்பதற்கு 20-1-65க்கு முன் விண்ணப்பக் கடிதங்கள் அதிபருக்கு அனுப்பப்படல் வேண்டும். 1246

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகல இயந்திரங்களிலும் எமக்கு பயிற்சி அளிக்குக

## கடற்றொழில் இலாகா பயிற்சி நிலைய தமிழ்மாணவர் கோரிக்கை

யாழ்ப்பாணம், திங்கள்

நீர்கொழும்பு கடற்றொழில் இலாகா பயிற்சி நிலையத்தில் பயிற்சிபெற்று வெளியேறிய தமிழ் மாணவர்கள் தங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட பாரபட்சமான நடவடிக்கைகள் குறித்து கடற்றொழில் பகுதி அதிபருக்கு மீண்டும் புகார் செய்துள்ளனர். தங்களது கோரிக்கையை ஏற்றுக்கொண்டு தங்களுக்கு பலதரப்பட்ட இயந்திரங்களிலும் பயிற்சி கிடைக்க ஒழுங்குகள் செய்யுமாறு இம்மாணவர்கள் கோரியுள்ளனர்.

கடற்றொழில் இலாகா பயிற்சிநிலையத்தில் எட்டுத் தமிழ் மாணவர்கள் "டயா உசல இயந்திரத்தில்" பயிற்சி பெற்று வெளியேறினர் என்றும் ஆனால் வடக்கு கிழக்கு மாகாணங்களில் மேற்படி இயந்திரம் உபயோகத்துக்கு இல்லாததால் பயிற்சி பெற்றும் பலனில்லாதிருக்கிறதென்றும் இவர்கள் தங்களது கோரிக்கையில் தெரிவித்துள்ளனர்.

'எங்களுடன் பயிற்சிபெற்ற சிங்கள மாணவர்களுக்கு பலதரப்பட்ட இயந்திரங்களிலும் பயிற்சி அளிக்கப்பட்டிருப்பதுடன் அவர்களுக்கு பயிற்சி முடிவில் ஆறுமாத காலத்துக்கு வேதனமும் அளிக்கப்படுகிறது. ஆகையினால் எங்களுக்கு பலதரப்பட்ட இயந்திரங்களிலும் மீண்டும் அங்கு பயிற்சியளிக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்" என்று இம்மாணவர்கள் தங்களது கோரிக்கையில் தெரிவித்துள்ளனர்.

இதுசம்பந்தமாக இவர்கள் அடுத்தவாரம் கடற்றொழில் அமைச்சு நிரந்தரக் காரியதரிசியை பேட்டிகாண முடிவு செய்துள்ளனர்.

## வாக்களிப்பு நிலையம் வேண்டும்

"சுழிபுரம், ஞாயிறு

பொதுத் தேர்தலில் புதிய பல வாக்களிப்பு நிலையங்கள் வட்டுக்கோட்டைத் தொகுதியில் ஸ்தாபிக்கப்பட வேண்டியிருப்பதை தேர்தல் கமிஷனருக்கு சுட்டிக்காட்டி பல பொதுஸ்தாபனங்கள் மனுப் பண்ணியுள்ளன. கிராமசபை பட்டினசபை ஆகிய வட்டாரங்கள் சிலவற்றுக்கு இதுவரை காலமும் போட்டிகள் ஒன்றும் நடைபெறாது அங்கத்தவர்கள் ஏகமனதாகவே தெரிவு செய்யப்பட்டு வந்ததால் வாக்களிப்பு நிலையங்கள் ஏற்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படவில்லை. இதனால் போட்டிகள் நடைபெறாமல் இருந்த வட்டாரத்தில் உள்ள மக்கள் வாக்களிப்பதற்குத் தூர இடங்களுக்கு போகவேண்டியுள்ளது. இப்படியான இடங்களிலுள்ள மக்களுக்கு புதிய வாக்களிப்பு நிலையங்கள் திறக்க வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டி சுழிபுரம் ஐக்கிய மகன் சனசமூக நிலையம், தனித்தும் மற்றும் பல பல சங்கங்கள் ஒன்று சேர்ந்தும் மனுப்பண்ணியுள்ளனர்.

—

## உற்சவம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், திங்கள்

காங்கேசன்துறை மாங்கொல்லை ஞானவைரவர் கோவில் வருடாந்த அலங்கார உற்சவம் நேற்று ஆரம்பமாகியது. பத்துத்தினங்கள் ஆலய உற்சவம் தொடர்ந்து நடைபெறும்.

# சகல தொகுதிகளிலும்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நம்பலம், வட்டுக்கோட்டை-சி. துணபாலசிங்கம், உடுவில்-எஸ். சிவனேசன், உடுப்பிட்டி-எம். சிவசிதம்பரம், கோப்பாய்-ரி குணரத்தினம், சாவகச்சேரி-எம் சிவானந்தன், கிளிநொச்சி-ஏ சிவசுந்தரம், வவனியா-ரி சிவசிதம்பரம், கல்குடா-வி நல்லையா, மட்டக்களப்பு-ஜே எல் திலவீரசிங்கம், மூதூர்-எஸ் எஸ் ஆறுமுகம், பருத்தித்துறை-எஸ் நடராசா, காங்கேசன்துறை-எஸ் சிறிபாஸ்கரன்.

### மற்றைய கட்சிகள்

எதிர்வரும் பொதுத் தேர்தலில், சில கட்சிகள் போட்டி தவிர்ப்பு உடன்படிக்கைகளும் செய்து கொண்டுள்ளன. கம்யூனிஸ்ட்-சமசமாஜ கட்சி தெனிலங்கையில் போட்டி தவிர்ப்பு ஒப்பந்தம் செய்திருக்கிறது.

லங்கா சமசமாஜக் கட்சி மொத்தம் இருபத்தைந்து தொகுதிகளில் போட்டியிடுகிறது.

தமிழ்ப் பகுதிகளைப் பொறுத்த மட்டில் இக்கட்சி, நல்லூர், கோப்பாய், உடுவில், உடுப்பிட்டி, கிளிநொச்சி ஆகிய ஐந்து தொகுதிகளில் தனது அபேட்சகர்களை நிறுத்தியுள்ளது.

### சுதந்திரக்கட்சி

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மொத்தம் 88 தொகுதிகளில் போட்டியிடுகின்றது. காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவின் அத்தனகல்லத் தொகுதியில் பிரதமர் ஸ்ரீமா பண்டாரநாயக்கா போட்டியிடுகின்றார். இந்தக் கட்சியின் சார்பில் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இருவர் போட்டியிடுகிறார்கள்.

கம்யூனிஸ்ட்கட்சி சார்பில் அறுபேர் போட்டியிடுகிறார்கள். இவர்களில் அதிகமானவர்கள் தமிழ் பகுதியில்தான் போட்டியிடுகிறார்கள்.

### ஐ. தே. கட்சி அபேட்சகர்கள்

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் வன்மையாகப் போட்டியிடும் ஐக்கிய தேசியக் கட்சி மொத்தம் 111 தொகுதிகளில் போட்டியிருகிறது. இக்கட்சியின் சார்பில் வடக்கு மாகாணத்தில் எவரும் போட்டியிடவில்லை. ஆனால் கிழக்குமாகாணத்தில் ஐவர் இக்கட்சி அபேட்சகர்களாகப் போட்டியிடுகின்றனர். வடக்கு, கிழக்கு மாகாணங்களைத் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் ஐக்கிய தேசியக்கட்சிக்கும், சுதந்திரக் கட்சிக்கும் பலமான போட்டியிருக்கும்.

### இன்றைய கடைசி நேரம்

நியமனப்பத்திரங்கள் இன்று நண்பகல் 12 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையில் தாக்கல் செய்யப்படும். அபேட்சகர்கள் தங்களது கட்டுப்பணத்தைச் செலுத்துவதற்குரிய கடைசி நேரம் இன்று நண்பகல் 12 மணியாகும்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு ஜனவரி மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## 40 மீனவரை காணவில்லை

டோக்கியோ, ஜன 10

ஜப்பானின் ஒரு பகுதியில் ஏற்பட்ட வெள்ளத்தினால் 40 மீனவர்களைக் காணவில்லை. 800 வீடுகள் சேதமடைந்துள்ளன.

—

## பிரவேச, பாலபண்டித வகுப்புகள்

சுழிபுரம், ஞாயிறு

வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச்சங்க வகுப்பு நிர்வாகக் குழுவினர் யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கப் பிரவேச, பாலபண்டித வகுப்புகளை நடத்துவது குறித்து ஆலோசித்தனர்.

18-1-65 திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வகுப்புகளைப் பண்ணாகம் மெய்கண்டான் உயர்தர பாடசாலையில் தொடக்கி நடத்துவதாகத் தீர்மானித்துள்ளனர்.

—

## ப. நோ. கூ. சங்கம் தேவை

### மகாசபைக் கூட்டத்தில் கோரிக்கை

உடுப்பிட்டி, திங்கள்

"கரவெட்டி மேற்கு மத்தொனி, சண்டில் வட்டாரங்களில் வாழும் சுமார் 500-க்கு மேற்பட்ட சிறுபான்மைத் தமிழ் மக்களாகிய எங்களுக்கென ஒரு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் ஒன்று அவசியம் தேவை" என்னும் ஒரு தீர்மானம் உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரியையும், யாழ்-கிழக்கு உதவி ஆணையாளரையும் கேட்டுக்கொள்ளுமுகமாக திரு. வி. மாணிக்கம் தலைமையில் நடைபெற்ற மகாசபைக் கூட்டத்தில் திரு. க. நாகமுத்து என்பவர் கொண்டுவந்தார். அதை வரவேற்று திரு. ஐ. நாகராசா பேசினர்.

உத்தேச சங்கத்துக்கு 'ஸ்ரீ முருகானந்தா பலநோக்கு கூட்டுறவுச்சங்கம்' என்னும் பெயர்வைக்கப்பட்டது. சங்கத்திற்கு ஒன்பதுபேர்கொண்ட நிர்வாகசபையொன்றும் தெரிவுசெய்யப்பட்டது. தலைவர்: திரு. நா. வல்லிபுரம் உப தலைவர்: திரு ஆ. வாரித்தம்பி காரியதரிசி. திரு க. வல்லிபுரம். 500-க்கு மேற்பட்ட கூப்பன்களடங்கிய கையெழுத்துக்கள் சேகரிக்கப்பட்டன.

—

அரசாங்க

## மருந்து கலவையாளர் பரீட்சை பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், திங்கள்

சென்ற வருடம் டிசம்பர் மாதம் நடைபெற்ற அரசாங்க மருந்து கலவையாளர் பரீட்சை பெறுபேறுகள் வருமாறு:

முதலாம் பிரிவில் எவரும் சித்திபெறவில்லை.

2-ம் பிரிவு: கே. பாலச்சந்திரன், ஆர். கந்குணராஜா, என் சிவசுப்பிரமணியம், எஸ் சர்வானந்தன், ஏ. சிவச்சந்திரன், சி சண்முகநாதன், செல்வி த சபாரத்தினம்.

3-ம் பிரிவு: ஜே ஏ வி இமானுவல், என் நகுலேசபிள்ளை, வி ஸ்ரீ மயூரன், என் சுந்தரலிங்கம், செல்வி ம சவரிமுத்து, ரி தங்கராஜா, செல்வி க வேலாயுதன்.

ரிபேர்ட்: பேட்டி பர்னண்டோ, செல்வி பி கனகாம்பிகை, கே நவரத்தினம், செல்வி சி ஜீ ரத்தினயகா, ரி சிவானந்தன், செல்வி இ சரஸ்வதியம்மாள்.

—

## தலைவர் தேர்தல்

சுழிபுரம், ஞாயிறு

மானிப்பாய் பட்டின சபைக்கு புதிய தலைவர் ஒருவரைத் தெரிவு செய்யும் கூட்டம் ஜனவரி 15-ம் திகதி நடைபெறவிருக்கின்றது.

# 47 லட்சம் வாக்காளர் 151 எம். பி. க்களை தெரிவுசெய்வர்

கொழும்பு ஞாயிறு

வருகிற மார்ச் மாதம் 22-ம் திகதி நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலில் பார்லிமெண்டுக்கு 151 எம். பி. க்களை 47 லட்சத்துக்கு மேற்பட்ட வாக்காளர்கள் தெரிவு செய்வார்கள்.

நாட்டில் மிக பெரிய தேர்தல் தொகுதி கொழும்பு மத்திய தொகுதியாகும். 93,000 க்கு மேற்பட்ட வாக்காளர்கள் 3 எம். பி க்களை அங்கு தெரிவுசெய்வார்கள்.

இரண்டாவது பெரிய தேர்தல் தொகுதி, மத்திய மாகாணத்திலுள்ள அக்குரணையாகும். இங்கு 64,000 வாக்காளர்கள் 2 எம். பி. க்களை தெரிவுசெய்வார்கள்.

நாட்டில் மிகவும் சிறிய தொகுதி வடமத்தியமாகாணத்திலுள்ள மிகிந்தலை. இங்கு வாக்காளர் தொகை 18,600.

—

## 94 கடற் தொழிலாளர் கதி என்ன?

காங்கேசன்துறை, ஞாயிறு

சூறாவளியின் போது கடற்றொழிலுக்கு மயிலிட்டியிலிருந்து சென்ற 94 கடற் தொழிலாளர்களின் கதி என்னவாகிற்று என்பது பற்றி இன்னமும் ஒன்றும் தெரியவில்லை என காங்கேசன்துறை பட்டின சபையின் ஆறும் வட்டார அங்கத்தவர் திரு. தி. வி இரத்தினராசா தெரிவித்துள்ளார்

இவர்களில் 58பேர் மயிலிட்டிவாசிகளென்றும் மிகுதி 36பேர் வெளியூரவர் எனவும் அவர் அறிவித்துள்ளார்

—

## வெளிமடை பட்டினசபை

பண்டாரவளை, ஞாயிறு

வெளிமடை பட்டினசபையின் தலைவர் தெரிவின்போது பூவா—தலையா போட்டுப் பார்த்து, தலைவர் தெரிவு செய்யப்பட்டார். ஜாதிக விமுக்தி பெரமுனை கிளையின் தலைவரான திரு. ஜேம்ஸ் சில்வா பட்டினசபைத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

—

## உடுப்பிட்டியில் கம்யூனிஸ்ட்-சமசமாஜ உடன்பாடு

யாழ்ப்பாணம், திங்

உடுப்பிட்டித் தொகுதியில் இடதுசாரிகள் சார்பில் சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த திரு ஆர் ஆர் தர்மரத்தினத்தை நிறுத்துவதென சமசமாஜக்கட்சியும் கம்யூனிஸ்ட் கட்சியும் உடன்பாட்டுக்கு வந்துள்ளன

உடுப்பிட்டியில் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் போட்டியிடுவதற்காக கட்டுப்பணம் செலுத்தியிருந்த திரு. பி. குமாரசாமி போட்டியிலிருந்தும் விலகிக்கொள்ள முடிவு செய்துள்ளார்

—

## இடமாற்றம்

உடுப்பிட்டி, ஞாயிறு

அல்வாய் மெதடிஸ்த பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றிய திரு.கே.செல்வநாயகம் புன்னாலைக்கட்டுவன் இந்து தமிழ்க்கலவன் பாடசாலைக்கு இடமாற்றம்செய்யப்பட்டுள்ளார்.

—

## காமராஜ்

துர்க்காபூர், ஜன. 10

ரஷ்யாவில்ஏற்பட்ட தலைமை மாற்றம் சமாதான சக்தியை பலப்படுத்தியிருப்பதாய் காங்கிரஸ் தலைவர் காமராஜ் 69வது மகாநாட்டில் பேசும் போது கூறினர்.

—

## ஜாப். பிரதமர்

டோக்கியோ, ஜன. 10

ஜப்பானிய பிரதம மந்திரி திரு. ஸாட்டோ ஜனாதிபதி ஜோன்ஸனைச் சந்திக்கும் பொருட்டு அமெரிக்கா புறப்பட்டார்.

## வட்டுக்கோட்டையில் தமிழ் காங்கிரஸ் அபேட்சகர்

யாழ்ப்பாணம், திங்கள்

வட்டுக்கோட்டை தொகுதியில் தமிழ்காங்கிரஸ் சார்பில் திரு. எம் கே சுப்பிரமணியம் போட்டியிடுவாரென அறிவிக்கப்பட்டுள்ளது தமிழ்காங்கிரஸ் சார்பில் திரு சி தனபாலசிங்கம் முன்னர் போட்டியிடவிருந்தார்

—

## தெளிவாக....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முதலாளித்துவ சகாப்தத்தில் முதலாளித்துவ நாடுகளுடன் மட்டுமே இந்நாடு தொடர்பு கொண்டது 1956-க்கு பின் சோஷலிஸத்துக்கு இட்டுச்செல்லும் மத்திய வழி கடைப்பிடிக்கப்பட்டது. முதலாளித்துவ நாடுகளுடன் மட்டுமின்றி, நடுநிலைமை, இதரநாடுகளுடன் இக்காலத்தில் நட்புறவு கொண்டோம்.

முதல் சகாப்தத்தில் மேலைநாட்டுக் கலாச்சாரமே அங்கு நிலவியது ஆனால் இரண்டாவது சகாப்தத்தில் கலாச்சாரம் இலக்கியம். பௌத்தமதம் ஆகியவற்றின் மறுமலர்ச்சிக்கு அரசாங்கம் பாடுபட்டிருக்கிறது.

முதலாளித்துவ நாடுகளுடன் மட்டும் நட்புக்கொண்டு சோஷலிஸ நாடுகளுடன் ஒருவித வெறுப்பு கொண்டிருந்த சகாப்தம் மாறி, புதிய சகாப்தத்தில் எல்லா நாடுகளுடன் நட்புறவு கொண்டு பரஸ்பர அனுபவங்களை நாம் அடைந்திருக்கிறோம்.

வியாபாரம், நிர்வாகம் குடியேற்றம், மீன்பிடித் தொழில், கல்வி, சமூக சேவை விவசாய தொழிலாளர் பிரச்சினை, இந்தியப் பிரச்சினைக்குத் தீர்வு ஆகிய விஷயங்களில் மேற்கண்ட இரு சகாப்தங்களில் எது நன்மை செய்திருக்கிறது என்பதை மக்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

இந் நாட்டின் வளங்களை உறிஞ்சிய அன்னிய ஏஜென்ஸிகளை மேற்கண்ட செயல், வர்த்தகத்தை இலங்கையர் மயமாக்கியது ஆகியவற்றை எந்த சகாப்தம் செய்தது?

ஒரு சிலரின் நலனுக்காக அரசாங்கம் வேண்டுமா, பலரது நன்மைக்காக அரசாங்கம் வேண்டுமா என்பதையும் மக்கள் சிந்திக்கவேண்டும்.

தேர்தல் காலத்தில் பலவித பிரசாரங்கள், தூண்டுதல் ஏமாற்றுதல் ஆகியவற்றுக்கு மக்கள் ஆளாகலாம். ஆனால் இரு சகாபதங்களிலும் நடைபெற்ற விஷயங்களை அவர்கள் கருத்தில் கொண்டு செயலாற்ற வேண்டும்.

பத்திரிகைகள் தங்களை ஜனநாயக காவலர் எனச் சொல்லிக்கொள்கின்றன கடந்த தேர்தலில் அவை இதற்கேற்ப நடக்கவில்லை. மல்வத்தை மகாநாயகருக்கு நான் எழுதிய கடிதத்தை சில பத்திரிகைகள் கொஞ்சம் மட்டுமே பிரசுரித்தன. சில அடியோடு பிரசுரிக்கவில்லை. இது தான் ஜனநாயகமா?

எனவே மக்கள் சுயேச்சையாகவும், தெளிவாகவும், நிதானமாகவும் யோசித்து தேர்தலை அணுகவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். இப்போது மக்களிடையே நல்ல முறையில் அரசியல் விழிப்பு ஏற்பட்டிருக்கிறது. எனினும் முற்றும் அது திருப்திகரமாய் இல்லையென்றே சொல்லவேண்டும்.

எனினும் இரு சகாப்தங்களிடையே மக்களுக்கு எந்த சகாப்தம் நன்மை செய்திருக்கிறதென்பதை யோசித்து அவர்கள் அதற்கேற்ப நடந்து கொள்ளவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org